வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 11.03.2024 திங்கட்கிழமை | இதழ் : 71 | பக்கங்கள் : 12







## பழைய விடயங்களை மறந்து எங்களுடன் இணைய வேண்டும்

# ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு!





கொழும்பு, மார்ச் 11

**பழைய விடயங்களை மறந்துவிட்டு ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட அனைவரும் எங்களுடன் இணைய முன்வர வேண்டும். அனைவரும் ஒன்றாக இணைந்து இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முன்வர வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.**

வங்குரோத்து அடைந்திருந்த நாட்டை மீண்டும் மீட்பதற்கு 5 வருடங்கள் வரை செல்லும் என்றே அனைவரும் நினைத்தனர். ஆனால், குறுகிய காலத்தில் எங்களால் முடியுமாக இருக்கிறது - என்றும் கூறினார்.

குருநாகல் - குளியாப்பிட்டியில் ஐக்கிய தேசிய கட்சியின் மக்கள் பேரணியும் முதலாவது பொதுக்கூட்டமும் நடந்தது. இதில், உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கஷ்டமான காலத்திலேயே மக்கள் தற்போது இருந்து வருகின்றனர். அதனால் குறுகிய அரசியல் பிரச்னைகளை மறந்து நாட்டை முன்னுக்கு கொண்டுசெல்ல அனைவரும் முன்வரவேண்டும் என்ற செய்தியை தெரிவிப்பதற்கே இந்த இடத்துக்கு வந்தேன். வங்குரோத்து நிலையில் இருந்த நாடு தற்போது அதில் இருந்து மீள ஆரம்பித்துள்ளது.

எதிர்வரும் மே, ஜூன் மாதமளவில் கடன் பெற்ற நாடுகளுடன் கைச்சாத்திட இருக்கிறோம். இதன் மூலம் எமது நாடு வங்குரோத்து அடைந்த நாடு என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

அத்துடன், இற்றைக்கு ஒன்றரை வருடங்களுக்கு

11

---

யாழ்ப்பாணம், கிளிநொச்சியில்

## படை வசமிருந்த மக்களின் 109 ஏக்கர் காணி விடுவிப்பு!



யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இராணுவத்திடம் இருந்த 109 ஏக்கர் காணிகள் மக்களிடம் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலும் கிளிநொச்சி மாவட்டத்திலும்

11

---

## உள்ளூராட்சியின் 8,400 பேருக்கு நிரந்தர நியமனம்!

கொழும்பு, மார்ச் 11

உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க

11

---

வெடுக்குநாறிமலை விவகாரம்:

## யாழ்ப்பாணத்தில் இன்று கவனவீர்ப்பு போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 11

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினத்தில் தமிழர்கள்மீது பொலிஸார் மேற்கொண்ட அடக்குமுறை மற்றும் கைதைக் கண்டித்து இன்று திங்கட்கிழமை போராட்டம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூர் நல்லை ஆதீன முன்றிலில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இந்த கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தவத்திரு அகத்தியர் அடிகளார் தலைமையில் இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் விடுக்கப்பட்ட அழைப்பில்,

“வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோயிலில் மகா சிவராத்திரி வழிபாடு நடைபெற்றுக்

11

---

## ஐ. எம். எவ். பிரதிநிதிகளை சந்திக்கின்றார் சம்பந்தன்

சஜித், அநுரகுமார புறக்கணிப்பு

கொழும்பு, மார்ச் 11

சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளுடன் இன்றைய தினம் நடைபெறவுள்ள சந்திப்பில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தன் பங்கேற்கவுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு அதன் பிரதிநிதிகளுடன் கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்குவதாக தெரிவித்த ஜனாதிபதி இன்றைய தினம் இந்த சந்திப் புக்கு ஏற்பாடு செய்துள்ளார்.

இதேநேரம், சர்வதேச நாணய நிதியத்தின்

11

---



## விமான படையில் யாழ்ப்பாண இளைஞர்கள் சேர வேண்டும்!

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர்கள் விமானப் படையில் இணைய வேண்டும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

விமானப் படையின் 73ஆவது ஆண்டை முன்னிட்டு யாழ்ப்பாணம் - முற்றவெளியில்

11

---

## விமான படை கண்காட்சியில் ஏராளமான மக்கள் பங்கேற்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

விமான படையின் 73 ஆவது வருட நிறைவை முன்னிட்டு “வான் சாகசம் - 2024“ கண்காட்சி நிகழ்வு கள் யாழ்ப்பாணம் - முற்றவெளி மைதானத்தில் நேற்று ஐந்தாவது நாளாகவும் நடந்தது.

‘நட்பின் சிறகுகள்’ எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் கடந்த 06ஆம் திகதி ஆரம்பமான இந்தக் கண்காட்சி நேற்று இரவு 11 மணி வரை நடைபெற்றது.

11



## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் கொள்கை ரீதியிலான பிரச்னை உள்ளது என்று பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷவும் தெரிவித்துள்ளனர் என்ற செய்தியை நேற்றைய ஈழநாடுவின் தலைப்புச் செய்தியாகப் படித்திருப்பீர்கள்.

'அதிகாரப் பகிர்வு மற்றும் அரச சொத்துகளை தனியார் மயப்படுத்தல் போன்ற செயல்பாடுகளால் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க முடியாத கொள்கை ரீதியிலான பிரச்னை உள்ளது.' என இதன்போது ராஜபக்ஷக்கள் இருவரும் சுட்டிக்காட்டியுள்ளனர் என்கின்றது அந்தச் செய்தி.

அதிகாரப் பகிர்வு விடயத்தில் ராஜபக்ஷர்கள் என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர் என்பது நமக்கு தெரியாததல்ல. ஆனால், பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பில் பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த மற்றைய அதிகாரங்களை பகிர்வதில் தனக்கு பிரச்னை இல்லை என்று ஜனாதிபதி தரப்பில் சொல்லப்பட்டபோதிலும் ராஜபக்ஷ தரப்பினர் தமது தரப்பு கருத்தைத் தெரிவிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு நாட்டைக் கொண்டு நடத்துவதற்கு ஏற்கனவே 'பச்சைக்கொடி' காட்டியிருந்த ராஜபக்ஷக்கள் இப்போது, அதன் நிபந்தனைகளின்படி அரச சொத்துகளை தனியார் மயப்படுத்தும் முடிவை ஏற்றுக்கொள்ள முடியாது என்று புதிய நிபந்தனைகளுடன் புறப்பட்டிருக்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்ட மகிந்த தரப்பு இப்போது தனியார் மயமாக்கலை மாத்திரம் எதிர்க்கத் தொடங்கியிருக்கின்றது.

ஏற்கனவே, சிறீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தையும் லங்கா ஹொஸ்பிட்டல் நிறுவனத்தையும் வாங்குவதற்கு விண்ணப்பித்த புலம்பெயர் தமிழர் ஒருவரின் நிறுவனத்தின் விண்ணப்பத்தை அமைச்சரவை காரணம் எதுவும் கூறாமலேயே நிராகரித்து விட்டது. அமைச்சரவையின் இந்த முடிவுக்கு எதிராக அந்தப் புலம்பெயர் தமிழரின் நிறுவனமான லைக்கா மொபைல் நிறுவனம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடைக்கால தடை உத்தரவைப் பெற்றிருக்கின்றது.

இந்த செய்திகள் வெளிவரும்வரை அமைதியாக இருந்த ராஜபக்ஷக்கள் இப்போது அதற்கு எதிராக - அதாவது, லைக்கா நிறுவனமே ரெலிக்கொம் நிறுவனத்தை வாங்கவிருக்கின்றது என்று நம்பப்படும்வரை அமைதியாக இருந்தவர்கள் இப்போது அந்த நிறுவனத்தை இந்திய நிறுவனம் ஒன்று வாங்கவிருக்கின்றது என்றதும் தனியார் மயமாக்கலுக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

இதுகுறித்து மேலும் சில தகவல்களைப் பெறுவதற்காக கொழும்பில் உள்ள மூத்த ஊடகவியலாளர் ஒருவருடன் பேசியபோது அவர் தெரிவித்த தகவல்கள் ஆச்சரியத்தைத் தந்தன.

கடந்த சில நாட்களாகவே இந்தத் தனியார் மயமாக்கலுக்கு எதிராகவும் இந்திய முதலீட்டாளர்களின் முதலீடுகளுக்கு எதிராகவும் தெற்கில் தொடர்ச்சியாக பல கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றனவாம்.

'தேச பக்தி தேசிய படை' என்ற பெயரில் ஏற்பாடு செய்யப்படும் இந்தப் பேரணிகளில் இந்திய படையெடுப்பையும் அதன் உள்ளூர் முகவர்களையும் தோற்கடிப்போம் என்று அழைப்பு விடுக்கப்பட்டு வருகின்றனவாம்.

இந்திய எதிர்ப்பையும் இனவாதத்தையும் இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்திலிருந்து தெற்கில் விதைத்து வந்தவர்கள் ஜே. வி. பியினர் என்பது இரகசியமானதல்ல. அவர்களுக்கு மக்கள் மத்தியில் தற்போது ஏற்பட்டிருக்கும் செல்வாக்கு மகிந்தவின் ஆதரவுத்தளத்திலிருந்து போனது தான் என்பதும் புரிந்துகொள்ளக்கூடியதே.

இந்த மக்கள் கூட்டத்தை அதாவது சிங்கள இனவாதம் ஊட்டப்பட்டு - வளர்க்கப்பட்ட மக்கள் கூட்டத்தை இலக்கு வைத்து இப்போது தெற்கில் பிரசாரம் தொடங்கப்பட்டிருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தினார் அந்த தெற்கின் ஊடக நண்பர்.

இந்திய எதிர்ப்பை தெற்கில் வளர்ப்பது என்றால் அதன் பின்னால் யார் இருப்பார்கள் என்பது புரிந்துகொள்ளக் கூடியதுதானே.

'இன்று ஒரு கூட்டம் நடத்துவதற்கு சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன என்றால், ஒரு நகரத்தில் பல ஆயிரம் சுவரொட்டிகள் ஒட்டுவதற்கே பல மில்லியன் ரூபாய்களை செலவிட வேண்டியிருக்கும். அப்படி சுவரொட்டிகளுக்கு மாத்திரமே இவ்வளவு தொகை செலவிடப்படுகின்றது என்றால் நீங்களே ஊகியுங்கள் அதன் பின்னால் யார் இருக்கிறார்கள் என்று' என்றார் அந்த நண்பர்.

தனியார் மயமாக்கலுக்கு எதிராக மகிந்த தப்பினர் எதிர்ப்புத் தெரிவித்து வரும் பின்னணியில், அந்த இந்திய எதிர்ப்பு கோஷமும் தொடங்கியிருக்கின்றது.

- ஊர்க்குருவி.

# ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது சென். பற்றிக்ஸ் கல்லூரி!











யாழ்ப்பாணம், மார்ச் 11

வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி அணியை 34 ஓட்டங்களால் வெற்றி கொண்டு ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி.

“பொன் அணிகளின் போர்“ என்று அழைக்கப்படும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி சென். பற்றிக்ஸ் கல்லூரிகளுக்கு இடையிலான பெருந்துடுப்பாட்ட போட்டி கடந்த 2ஆம் திகதி சமநிலையில் முடிவடைந்தது.

இதைத் தொடர்ந்து இரு கல்லூரிகளுக்கும் இடையில் ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்துக்கான ஒருநாள் (50 ஓவர்) போட்டி 31ஆவது ஆண்டாக நேற்று முன்தினம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென். பற்றிக்ஸ் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது.

யாழ்ப்பாணக் கல்லூரியின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் முதல் மூன்று விக்கெட்களை 13 ஓட்டங்களுக்கு இழந்து நெருக்கடியான நிலையில் காணப்பட்டது சென். பற்றிக்ஸ் கல்லூரி.

எனினும், 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்து சிறப்பாக ஆடிய டேவிட் அபிலாஸ் றொபின்சன் சியந்தன் சிறப்பாக ஆடி இணைப்பாட்டமாக 57 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர். அபிலாஷ் 34 ஓட்டங்களையும் சியந்தன் 24 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

பின்னர் ஏழாவது விக்கெட்டுக்காக இணைந்த பற்குணம் மதுஷன் மற்றும் குமணதாசன் சாருசன் இணையும் 57 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றது.

இதனால், 50 ஓவர்கள் நிறைவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 8 விக்கெட் இழப்புக்கு 190 ஓட்டங்களை பெற்றது.

பந்து வீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்களான புவிநயன் 29 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்களையும் எஸ்.மதுஷன் மற்றும் எஸ். நர்த்தனன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்களை கைப்பற்றினர்.

யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் எஸ். நர்த்தனன் அதிகபட்சமாக 40 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். டேமியனுடன் இணைந்து 65 ஓட்டங்களை அவர் இணைப்பாட்டமாகப் பெற்றார்.

எனினும், சென். பற்றிக்ஸ் கல்லூரியின் அபாரமான பந்துவீச்சால் யாழ்ப்பாணக் கல்லூரி 45.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 156 ஓட்டங்களை பெற்றது. இதனால், யாழ்ப்பாண கல்லூரி அணி 34 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்து வீச்சில் சென். பற்றிக்ஸ் கல்லூரி சார்பாக கே. சாருசன் 9 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் அபிலாஸ் மற்றும் பிரியங்கன் தலா இரண்டு விக்கெட்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த பந்து வீச்சாளராகவும் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் சாருசனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பற்குணம் மதுஷனும், சகலதுறை ஆட்டக்காரராக யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். நர்த்தனனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்கள் தவிர சிறந்த இணைப்பாட்ட வீரர்களாக டேமியன், நர்த்தன், சிறந்த களத்தடுப்பாளராக றொய்ஸ் ஜென்சனும் தெரிவாகினர்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
11.03.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், மாசி 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எதிர்பாராத நகர்வுகளை எவ்வாறு கையாள்வது?

ரணில் - ராஜபக்ஷ தரப்பின் சந்திப்பானது முடிவுகள் இல்லாமல் முடிவுற்றிருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலை அடிப்படையாகக் கொண்டே குறித்த சந்திப்பு இடம்பெற்றிருந்தது. ராஜபக்ஷக்களை ரணில் காப்பாற்ற முயற்சிக்கின்றார் என்னும் பார்வை பரவலாக இருக்கின்றது. இந்த நிலையில் ராஜபக்ஷக்களின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க தேர்தலை எதிர்கொண்டால் அது நிச்சயம் - அவரின் வீழ்ச்சியாகிவிடும். மறுபுறம் தேசிய மக்கள் சக்தி (ஜே. வி. பி.) எழுச்சியடைந்து வருகின்றது. அவ்வாறானதொரு கணிப்பும் பரவலாக உண்டு. குறிப்பாக, இந்தியாவின் அழைப்பை ஏற்று அநுரகுமார திஸநாயக்க புதுடில்லி சென்றதிலிருந்து ஜே. வி. பி தொடர்பான தேசிய அவதானம் ஏற்பட்டிருக்கின்றது. தேசிய அளவில் அநுரகுமார திஸநாயக்கவும் தவிர்க்க முடியாத ஒரு நபர் என்னும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் ரணிலும் - சஜித் பிரேமதாஸவும் ஒன்றுபடுவதற்கான நகர்வுகள் அதிக கவர்ச்சிமிக்கவையாகவும் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவனவாகவும் நோக்கப்படுகின்றன. ஈழநாடு நாளிதழுக்குக் கிடைக்கும் தகவல்களின்படி இதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளதாகவே தெரிகின்றது. இறுதி நேரத்தில் ஏதும் நிகழ்ந்தாலே தவிர வாய்ப்புகள் அதிகம். ஒருவேளை ரணில் -சஜித் ஓரணியானால் அவ்வாறானதொரு சூழலை தமிழ்க் கட்சிகள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன? அதற்கான வேலைத்திட்டம் என்ன?

ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் 2015இல் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் பங்காளிகளாக இருந்தவர்கள். கடந்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கே தமிழ் மக்கள் வாக்களித்திருந்தனர். வடக்கு - கிழக்கில் மட்டுமே சஜித் வெற்றி பெற்றிருந்தார். 2009இற்கு பின்னரான மூன்று ஜனாதிபதி தேர்தல்களிலும் ராஜபக்ஷ குடும்பத்தை எதிர்த்து போட்டியிட்ட தென்னிலங்கை வேட்பாளர்களுக்கே தமிழ் மக்கள் வாக்களித்திருந்தனர். ராஜபக்ஷக்களுக்கு எதிராக தமிழ் மக்களை அணி திரட்டுவதற்கு அதிகம் முயற்சிக்க வேண்டியதில்லை என்னும் பார்வையுண்டு. தமிழ் கட்சிகள் என்னதான் கூறினாலும்கூட தமிழ் மக்கள் தங்களுக்கே வாக்களிப்பார்கள் என்று ரணில் சிந்திப்பதற்கு அதிக வாய்ப்பு உண்டு. இவ்வாறானதொரு சூழலில் ரணிலும் - சஜித்தும் ஓர் அணியானால் தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதை இலகுவான விடயமாவே அவர்கள் கருதுவார்கள். அதற்கே அதிக வாய்ப்பு உண்டு. தமிழ் மக்களின் வாக்குகளை மிகவும் இலகுவாக பெற்றுவிட முடியுமென்று அவர்கள் எண்ணிவிட்டால் அதன் பின்னர் தமிழ் கட்சிகள் சரணாகதி அடையும் நிலைமையே ஏற்படும்.

இந்த நெருக்கடியான சவாலை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றனர்? தமிழ் சிவில் சமூக அமைப்புகளின் நிலைப்பாடு என்ன?

கடந்த மூன்று ஜனாதிபதி தேர்தல்களின் பின்னரான சூழலில் எவ்வாறான விடயங்கள் நடந்தேறின - என்பதை தமிழ் மக்கள் நன்கு அறிவர். அதுபற்றி நாம் மீண்டும் நினைவூட்ட வேண்டியதில்லை. இந்தப் பின்புலத்தில் நான்காவது ஜனாதிபதித் தேர்தலை புத்திசாதுர்யமாகவும் - தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் - அவர்களுக்கென தனித்துவமான பிரச்னைகள் உண்டு என்பதை நிரூபிக்கக்கூடிய வகையிலும் இந்தத் தேர்தலை பயன்படுத்தினால் மட்டுமே தமிழ் மக்கள் ஒரு தனியான தரப்பு என்பதை நிரூபிக்க முடியும். அவ்வாறானதொரு நிலைமையை ஏற்படுத்த வேண்டுமாயின் தமிழ் மக்கள் ஒரு தீர்மானகரமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

அந்த நிலைப்பாடு தமிழ் மக்களை இலகுவாக எவருமே விலைபேசிவிட முடியாது என்னும் நிலைமையை தென்னிலங்கைக்கும் இலங்கைத் தீவில் தலையீடு செய்ய முயற்சிக்கும் சர்வதேச தரப்புகளுக்கும் கூறுவதாக அமைய வேண்டும்.

இந்த விடயத்தில் தமிழ் கட்சிகள் தான்தோன்றித்தனமாக தீர்மானிப்பதை இம்முறை - தமிழ் மக்கள் அனுமதிக்கக்கூடாது. ஒரு மக்கள் கூட்டம் என்னும் வகையிலேயே மக்கள் முடிவெடுக்க வேண்டும். மக்களின் தீர்மானத்துக்குப் பின்னால் அரசியல் கட்சிகள் வரவேண்டிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும். இது தமிழ் மக்களுக்கான காலமாக மாற வேண்டும்.

வெடுக்குநாறிமலை விவகாரம்

# யாழ். பல்கலைக்கழக இந்து மன்றம் கண்டனம்!

*யாழ்ப்பாணம், மார்ச் 11*

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் அடிப்படை வழிபாட்டு உரிமையை மீறிய செயலானது உலகுக்கு எமது நிலையை அரசாங்கம் வெளிப்படுத்தி இருக்கிறது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றம், வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் மகா சிவராத்திரி தின பொலிஸ் அராஜகங்களை கண்டித்து வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில்,

சைவர்களின் வழிபாட்டு உரிமையையும், சைவ விழுமியங்களையும், புனித சடங்குகளையும் அவமதிக்கும் சம்பவங்கள் தமிழர்களின் தொன்மையான புனித பூமியில் இடம்பெற்றிருக்கிறது. அதன் உச்சகட்டமாக வெகுதூரத்தில் இருந்து வந்து விரதமிருந்து பூசை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பக்தர்களது வழிபாடுகளை தடுத்தும், வழிபாட்டில் ஈடுபட்ட பெண்களை கழுத்தை பிடித்து இழுத்து வீசியதுடன், தவறேதும் செய்யாத சிவனடியார்கள் விரதமிருந்து பூசையில் ஈடுபட்ட தருணம் மோசமாக கைது செய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், சப்பாத்துக் கால்களுடன் வழிபாட்டிடத்துக்குள் நுழைந்து பூசை மற்றும் படையல் பொருட்களையும் பொலிஸார் காலால் அப்புறப்படுத்தியதுடன், கோவிலில் நிகழ்ந்து கொண்டிருந்த யாகத்தையும் தடுத்து நிறுத்தியது போன்ற பொலிசாரது மிலேச்சத்தனமான செயலானது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும் - என்றுள்ளது.(ஐ)

# வெடுக்குநாறிமலையில் கைதானோர் மாற்று ஆடைகளின்றி சிரமம்!

*வவுனியா, மார்ச் 11*

வெடுக்குநாறிமலை விவகாரத்தில் கைது செய்யப்பட்ட 8 பேரும் மாற்று ஆடையின்றி அவதிப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய தினம் இவர்கள் மருத்துவ பரிசோதனைக்காக நேற்று வவுனியா மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கைதான 8 பேரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது, பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளான எட்டுபேரும் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அவர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

அவர்களை சட்ட வைத்திய பரிசோதனைக்கு முன்னிறுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து குறித்த 8 பேரும் சிறைச்சாலைகள் திணைக்களத்தால் நேற்று வவுனியா சட்ட மருத்துவ அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று விடுமுறை தினம் என்பதால் சிறைக்கைதிகளை பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் இல்லை. இந்நிலையில், அவர்கள் மாற்று ஆடையின்றி அவதிப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மாற்று ஆடைகளை சிறைக் காவலர்கள் ஊடாக வழங்க முயற்சி எடுக்கப்பட்டபோதும் அது கைகூடவில்லை என்று தெரிய வருகின்றது.

(ஐ)

# தேக்கு மரக் குற்றிகளை கடத்தியவர் கைதானார்!

*முல்லைத்தீவு, மார்ச் 11*

புதுக்குடியிருப்பில் சட்டவிரோதமாகத் தேக்கு மர குற்றிகளை கடத்திச் சென்ற வாகனத்தின் சாரதி பொலிஸார் கைது செய்துள்ளனர்.


நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இந்த கடத்தல் சம்பவம் நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு பகுதியில் பட்டா ரக வாகனத்தில் தேக்கு மரகுற்றிகளை கடத்துவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைதானார் .



இந்தநிலையில் 13 தேக்கு மர குற்றிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அவர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**மார்ச் - 11 திங்கடகிழமை**
**சோபகிருது வருடம் - மாசி 28**
**நல்ல நேரம் : 06.00 - 07.30**
**ராகு காலம் : 07.30 - 09.00**
**திதி : துவிதியை**



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். மதிப்புக்கூடும் நாள்.

**இடபம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப்போன விஷயங்கள் முடியும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். மாற்றம் ஏற்படும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக்கொண்டிருக்காதீர்கள். உயரதிகாரிகள் உங்களை குறை கூறுவார்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். தாயாரின் உடல் நிலைசீராகும். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். பழைய சிக்கல்கள் தீரும். வியாபாரத்தில் ராஜதந்திரத்தால் லாபம் அதிகரிக்கும். முக்கியத்துவம் தருவார்கள். அமோகமான நாள்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்ததில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். ஊழியர்கள் வேலைகளை விரைந்து முடிப்பார்கள். நன்மைகள் கிட்டும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மனகசப்புகள் நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக்கொடுத்து வேலை வாங்குவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப்பேச்சிற்கும் ஆளாவீர்கள். சக ஊழியர்களால் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**மீனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். சக ஊழியர்களிடம் விட்டு கொடுத்து போங்கள். கவனம் தேவைப்படும்.

# தி. மு. க. தலைமையிலான கூட்டணியின் தொகுதி உடன்பாடுகள் நிறைவடைந்தன

*சென்னை, மார்ச் 11*

தமிழ்நாட்டின் ஆளும் கட்சியான தி. மு. க. தலைமையிலான 'இந்தியா' கூட்டணியின் தொகுதி உடன்பாடுகள் நிறைவடைந்துள்ளன.

இதன்படி, விரைவில் நடக்கவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களில் உள்ள 40 தொகுதிகளில் 21 தொகுதிகளில் தி. மு. க. போட்டியிடுகிறது. அதன் கூட்டணி கட்சிகளான காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் 9 தொகுதிகளிலும் புதுச்சேரியிலும் 10 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

தவிர, விடுதலை சிறுத்தைகள், மார்க்சிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்பவற்றுக்கு தலா 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. வைகோவின் ம. தி. மு. க., கொங்கு மக்கள் தேசிய கட்சி, முஸ்லிம் லீக் கட்சிகளுக்கு தலா ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், கமல் ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கும் ம. தி. மு. க. கட்சிக்கும் தலா ஒரு ராஜ்ய சபா உறுப்பினர் பதவிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

(ஐ)

# பா. ஜ. க. ஆட்சிக்கு வந்தால் பெண்களுக்கே முதல் பாதிப்பு

## கனிமொழி எம். பி. குற்றச்சாட்டு



*திண்டுக்கல், மார்ச் 11*

மக்களை பிரித்தாலும் பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சி மீண்டும் வந்துவிடக்கூடாது. மீண்டும் வந்தால் முதலில் பாதிக்கப்படுவது பெண்கள், குழந்தைகள்தான் என்று தி. மு. கவின் மாநில துணைப்பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி. தெரிவித்துள்ளார்.

தி. மு. க. மகளிரணியின் விழாவில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தேர்தல் நேரத்தில் சிலிண்டர் விலையை குறைத்தால் வாக்குப் போடுவார்கள் என பிரதமர் மோடி கனவு காண்கிறார். தமிழ்நாட்டு பெண்கள் ஏமாறத் தயாராக இல்லை. பெண்களுக்காக நடத்தப்படக் கூடிய ஆட்சி முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மொடல் ஆட்சி.

இந்தியாவில் வாழும் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. உத்தரபிரதேசத்தில் நடைபெறும் ஆட்சியில் பெண்கள் கொடூரமாக பாதிப்புக்குள்ளாகின்றனர். குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்கள் இரண்டு மடங்கு பா. ஜ. க. ஆட்சியில் அதிகரித்துள்ளது. இளம்பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடையாது. மக்களை பிரித்தாலும் பா. ஜ. க. ஆட்சி மீண்டும் வந்துவிடக்கூடாது. இந்தத் தேர்தலை இரண்டாவது சுதந்திரப் போராட்டம் என நினைத்து எதிர்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# கூட்டணியை விமர்சிக்காதீர்

## திருமாவளவன்



*சென்னை, மார்ச் 11*

மக்களவைத் தேர்தலையொட்டி 3 தொகுதிகள் கேட்ட நிலையில் 2 தொகுதிகள் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு ஒதுக்கப்பட்டன. இதையொட்டி, தி. மு. கவையோ, கூட்டணி கட்சியையோ விமர்சிக்கக்கூடாது என்று தனது கட்சியினருக்கு தெரிவித்துள்ளார் திருமாவளவன்.

இது தொடர்பாக அவர் முகநூல் நேரலையில் பேசுகையில்,

தி. மு. கவுடனான கூட்டணியில் 2 தொகுதிக்கு உடன்பட்டிருப்பது விடுதலை சிறுத்தைகள் கட்சியினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கலாம். கட்சி நலனா, கூட்டணி நலனா, நாட்டு நலனா என்ற கேள்வியின் போது, நாட்டு நலன் முக்கியமானது. அதற்கு கூட்டணி நலன் முன் நிபந்தனையாக இருக்கிறது.

எனவே, கட்சி நலனை அடுத்த நிலைக்கு தள்ளி வைக்க வேண்டிய கட்டாயம் எழுகிறது. கூட்டணியில் யார் பலமாக இருக்கிறோாம் என்ற ஒப்பீட்டில் சிறுத்தைகள் கட்சிக்கு உடன்பாடில்லை. அக்கறை உள்ளவர்களை போல கருத்துகளை சொல்லி நம் உணர்ச்சியை தூண்டுவார்கள். அதற்கு ஒரு போதும் இரையாகக்கூடாது.

திமுகவையோ, கூட்டணி கட்சிகளையோ விமர்சிப்பது ஒரு போதும் ஏற்புடையதல்ல - என்றார். (ஐ)

# சிறுத்தைகள் கட்சியினரின் இல்லங்களிலும் சோதனை!

*சென்னை, மார்ச் 11*

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச் செயலாளர் வீடு உள்பட சென்னை, கோவையில்11 இடங்களில் அமுலாக்கத்துறை சோதனை நடத்தியது.

தமிழ்நாட்டில் கடந்த சில மாதங்களாக அமுலாக்கத் துறை சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், பிரபலங்களின் வீடுகளில் அமுலாக்கத்துறையினர் சோதனை மேற் கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையிலேயே விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்தவர்களின் இல்லத்தில் நேற்று முன்தினம் பல மணி நேரம் இந்த சோதனை நடைபெற்றது. இதன்போது, பல ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# அ. தி. மு. கவுக்கு 5 கட்சிகள் ஆதரவு

*சென்னை, மார்ச் 11*

அ. தி. மு. க. கட்சிக்கு இதுவரை ஐந்து கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன. நேற்று முன்தினம் இந்திய குடியரசு கட்சியின் தலைவர் பழனிசாமியை சந்தித்து ஆதரவு தெரிவித்தார்.

முன்னதாக, தேசிய சிறுபான்மையினர் மக்கள் இயக்கம், மருது சேனை அமைப்பு, அகில இந்திய வன்னியர் குல சத்திரிய சங்கங்களின் பேரமைப்பு, அகில இந்திய விடுதலை சிங்கங்கள் ஆகிய கட்சிகளும் அ. தி. மு. கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. (ஐ)

# விஜயின் கட்சியில் செயலிமூலம் 20 இலட்சம் பேர் இணைந்தனர்!

*சென்னை, மார்ச் 11*

தமிழக வெற்றிக் கழகத்தில் உறுப்பினர் சேர்க்கை தொடங்கி 15 மணி நேரத்தில் 20 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அந்தக் கட்சியில் இணைந்துள்ளனர் என்று தகவல் வெளியாகி உள்ளது.

தமிழக வெற்றிக் கழக உறுப்பினர் சேர்க்கை செயலியை சென்னையில் அவரின் பணிமனையில் வெள்ளிக்கிழமை அறிமுகம் செய்து வைத்தார். 'தோழர்களாய் ஒன்றிணைவோம்' என்ற வாசகத்துடன் உறுப்பினர் சேர்க்கை செயலி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த செயலி அறிமுகமாகி 15 மணி நேரத்தில் 20 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் அதில் இணைந்தனர். இந்த செயலி மூலமாக 2 கோடி உறுப்பினர்களை நியமிக்க விஜய் இலக்கு நிர்ணயித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# வெடுக்குநாறி மலை விவகாரம் பல தரப்பினரும் கண்டனங்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 11

**சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த பக்தர்கள் பொலிஸாரால் வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டு, சிலர் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டார்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் உள்ளிட்ட பலர் கடும் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.**

அதுமாத்திரமன்றி இவ்வாறானதொரு சூழ்நிலையில் புதிதாக நிறுவப்படும் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படும் என்று எவ்வாறு கூற முடியும்? எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வவுனியா - நெடுங்கேணி - வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் தினத்தன்று பூசை வழிபாடுகளில் ஈடுபட நீதிமன்று அனுமதி அளித்தது. பூசை ஏற்பாட்டுக்கு சென்ற பூசகர் உட்பட இருவரை பொலிஸார் கைது செய்தனர். இதைத் தொடர்ந்து, சிவராத்திரி தினத்தில் எம். பிக்களான செ. கஜேந்திரன், சி. சிறீதரன் உட்பட ஏராளமானவர்கள் அங்கு சென்றனர்.

அவர்களின் வாகனங்களை செல்லவிடாது பொலிஸார் தடுத்த நிலையில், ஆலயத்துக்கு அவர்கள் சுமார் 5 கிலோமீற்றர் தூரம் நடந்தே சென்றனர்.

இந்தநிலையில், பொலிஸாரின் அடக்குமுறைகள் தொடர்பில்,

இந்த விவகாரத்தில் படைத் தரப்பினர் ஜனாதிபதியின் கட்டளைகளை மாத்திரமன்றி, நீதிமன்ற உத்தரவுகளுக்கும் மதிப்பளிப்பதில்லை. மாறாக, வெடுக்குநாறிமலை, குருந்தூர்மலை, மயிலத்தமடு மேய்ச்சல் தரை போன்ற விவகாரங்களில் பௌத்த பிக்குகளின் உத்தரவுகளே படைத் தரப்பினரால் நடைமுறைப்படுத்தப்ப டுகின்றன என்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கவலை வெளியிட்டார். அதுமாத்திரமன்றி, இத்தகைய போக்கு மிகப் பாரதூரமான விளைவையே ஏற்படுத்தும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

மேலும், சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்ட பக்தர்கள் கைது செய்யப்பட்டமையை வன்மையாக கண்டித்துள்ள அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் புலம்பெயர் தமிழர் அமைப்பான தமிழ் அமெரிக்கர்கள் கூட்டிணைவு, இது மத உரிமைகளை மீறுவதாகும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன், 'இங்கு வழிபாட்டில் ஈடுபடும் மக்கள் எதற்காக பொலிஸாரால் வெளியேற்றப்படுகின்றார்கள்? எதற்காக கைது செய்யப்படுகின்றார்கள்? அவர்களது மத உரிமை எதற்காக மீறப்படுகின்றது? இவ்வாறானதொரு சூழ்நிலையில் புதிதாக நிறுவப்படும் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் தமிழர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு வழங்கப்படும் என்று எவ்வாறு கூறமுடியும்?' என வினவியுள்ளார்.

(ஐ)



# இணையப் பாதுகாப்பு தொடர்பாக செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 11

பெண்களுக்கான இணையப் பாதுகாப்பு தொடர்பான செயலமர்வு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் இண்மையில் நடைபெற்றது.

சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் வகையில் லைக்கா ஞானம் அறக்கட்டளை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் பிரிவுடன் இணைந்து, இணைய பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வை நடத்தியது.

அண்மையில், பல்கலைக் கழக விஞ்ஞான பீட கேட்போர் கூடத்தில் நடந்த இந்த செயலமர்வில் 200 இளங்கலை பட்டதாரிகள் பங்கேற்றனர்.

இந்த செயலமர்வில் இணையப் பாதுகாப்பு தொடர்பான டிஜிற்றல் கல்வியறிவு மற்றும் இணையத்தை கையாளும் திறன்களை கொண்ட இளம் பெண்களை உருவாக்குவதும் ஒன்லைன் அச்சுறுத்தல்கள் மற்றும் பாதிப்புகள் பற்றிய தெளிவூட்டல்களை வழங்குவதை நோக்கமாக கொண்டிருந்தது.

(ஐ)

# எல்லை தாண்டிய மீன்பிடி 22 இந்திய மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 11

எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் 22 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் இரண்டு படகுகளுடனும் காங்கேசன்துறை கடற்பரப்பில் ஒரு படகுடனும் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மயிலிட்டி இறங்குதுறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு நீரியல்வள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சட்ட நடவடிக்கைகளை நீரியல்வள திணைக்களத்தினர் மேற்கொள்வார்கள் என கடற்படையினர் தெரிவித்தனர்.

(ஐ)

வெடுக்குநாறி மலை விவகாரம்:

# சுயலாப அரசியல் குழுக்கள் மக்களை தூண்டுகின்றனவாம்!

## அமைச்சர் விதுர சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 11

வெடுக்குநாறி மலை விவகாரத்தில் சுயலாப அரசியல் குழுக்களே மக்களை தூண்டி முறுகல் நிலைமைகளை உருவாக்குகின்றன என்று புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க தெரிவித்தார்.

வெடுக்குநாறி மலையில் முன்னெடுக்கப்பட்ட சிவராத்திரி பூசை வழிபாடுகளில் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகள் தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை திருநாட்டின் நாகரிகம் சம்பந்தமாக பாதுகாக்கப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. இதில் வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற பேதங்கள் இல்லை. இலங்கையின் புராதன நாகரிகம் சம்பந்தமான வரலாறுகளை நாம் பாதுகாப்பதுடன், அவற்றை அடுத்த சந்ததிக்கு கடத்துவதே பிரதான இலக்காக உள்ளது.

இந்நிலையில், வடக்கு மாகாணத்தின் வவுனியா மாவட்டத்தில் வெடுக்குநாறி மலை உள்ளது. இந்த பிரதேசமானது வன பரிபாலன திணைக்களத்தின் நிருவாகத்தின் கீழ் உள்ளது. அத்தோடு வெடுக்குநாறி மலையானது தொல்பொருளியல் பகுதியாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு வனப்பரிபாலன திணைக்களம் மற்றும் தொல்பொருளியல் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பகுதிகளில் தண்ணீர் பவுசர், உழவு இயந்திரங்கள் உள்ளிட்டவற்றை கொண்டுசெல்வது சட்டத்துக்கு முரணானதாகும்.

அதுமட்டுமன்றி அப்பகுதிகளில் பிரவேசிப்பதும் சட்டத்துக்கு முரணான நடவடிக்கையாகும். ஆகவே, உரிய அனுமதிகளைப் பெறாது அப்பகுதியில் பிரவேசிப்பதை தடுப்பதற்கு பொலிஸார் தமக்கு அதிகாரமளிக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைவாக நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்பது முக்கியமான விடயமாகின்றது.

எந்தவொரு விடயங்களையும் கருத்தில் கொள்ளாது பொது மக்கள் தாம் விரும்பியவாறு செயல்படுவதாக இருந்தால் நாட்டில் எந்தவொரு சட்டங்களும், நீதிமன்றங்களும் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

வெடுக்குநாறி மலை விடயத்தில், அப்பாவி தமிழ் மக்களின் பின்னால் சில அரசியல் தரப்பினர் உள்ளனர். அவர்களே தமிழ் மக்களை துண்டிவிட்டு முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள். இந்த விடயத்தில் இனக்குழுமங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்துவதால் வெறுமனே அரசியல் குழுவினரே இலாபமீட்டுகின்றனர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் - என்றார்.

(ஐ)

# காற்றாலை மின்சார திட்ட பாதிப்பு சுற்றாடல் அதிகார சபைக்கு கடிதம்!

மன்னார், மார்ச் 11

மன்னார் தீவில் 2ஆம் கட்டமாக அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் திட்டத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியதாக மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தெரிவித்தார்.

அந்தக் கடிதத்தில், மன்னார் கரையோரப் பகுதிகளில் காற்றாலைகளை நிறுவுவது தொடர்பில் பொது மக்கள், சமூக ஆர்வலர்கள் தமது கவலைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

காற்றாலை விசையாழி நிறுவலின் முதல் கட்டத்தால் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படும். போதுமான தணிப்பு நடவடிக்கைகள் இல்லாமல் மேலும் நிறுவல்களை மேற்கொள்ள எத்தனிப்பது குறித்து எம்முடைய கவலை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், காற்றாலையின் விளைவாக, ஈர நிலங்கள் தொடர்பான உடன்படிக்கையின் கீழ் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பறவைகள் சரணாலயம் போன்ற பகுதிகளில் காற்றாலை விசையாழிகள் இருப்பதால் பறவைகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள விடயம் குறித்த கடிதத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நாங்கள் காற்றாலை மின்சார திட்டத்துக்கு எதிரானவர்கள் இல்லை. குறிப்பாக அதனை இச்சிறிய மன்னார் தீவிற்குள் கொண்டு வருவதையே வேண்டாம் என்கின்றோம் என மெசிடோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ஐ)

# விமான படை கண்காட்சிக்கு கஞ்சாவுடன் வந்த பெண் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 11

முற்றவெளியில் நடைபெறும் விமானப் படையின் கண்காட்சிக்கு கேரள கஞ்சாவுடன் சென்ற பெண் கைது செய்யப்பட்டார்.

நயினாதீவைச் சேர்ந்த 26 வயது பெண்ணே 2 கிலோ கஞ்சாவுடன் இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

விமானப் படையின் 73ஆவது வருட நிறைவை முன்னிட்டு "வான் சாகசம் - 2024" கண்காட்சி நிகழ்வுகள் யாழ்ப்பாணம் - முற்றவெளி மைதானத்தில் நேற்று ஐந்தாவது நாளாக நடைபெற்றது.

இந்தக் கணக்காட்சிக்கு பொதியுடன் வந்த பெண்ணை நுழைவாயிலில் நின்ற விமான படையினர் சோதனையிட்டனர். இதன்போது பொதியில் கஞ்சா இருந்தமை கண்டறியப்பட்டது.

கைது செய்யப்பட்ட பெண் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(ஐ)

# முதலை கடித்ததில் பெண் படுகாயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 11

முதலை கடித்ததால் படுகாயமடைந்த பெண் ஒருவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பின் மன்னாகண்டல் வசந்தபுரம் கிராமத்தை சேர்ந்த 47 வயதுடைய சாமிநாதன் விசாலாட்சி என்ற பெண்ணே இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆடுகளை தண்ணீர் குடிப்பதற்காக பேராற்றுக்கு அழைத்துச் சென்றபேதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பெண் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இதேபகுதியில் அண்மையில் மாடு மேய்க்க சென்றவர் ஒருவரும் முதலையால் கடியுண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# இந்து அடையாளங்களை அழித்துவிட்டு சுற்றுலாவிகளை அழைத்து பயனில்லை

## ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி

யாழ்ப்பாணம்,மார்ச்11

இலங்கைக்கு மிகப் பெருமளவிலான சுற்றுலா பயணிகளாக இந்திய மக்களே வருகின்றனர். அவர்களில் மிகப்பெருமளவிலானோர் இந்துக்களாகவும் இருக்கின்றனர். அவர்களோடு மட்டுமல்லாமல் ஏனைய நாடுகளிலிருந்து வருகின்ற சுற்றுலா பயணிகளும் புராதன சின்னங்களைக் கண்டு தரிசிக்கவே விரும்புகின்றனர். ஆகவே அந்தப் புராதானச் சின்னங்கள் எல்லாவற்றையும் தகர்த்தெறிந்துவிட்டு, சுற்றுலா பிரயாணிகளே வாருங்கள் என்று கூவுவதில் அர்த்தமில்லை - என்று

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிறேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

நாட்டின் அரசியல் சாசனத்தின் பிரகாரம் இலங்கை குடிமக்கள் தாம் விரும்பிய மதத்தை பின்பற்றவும் வழிபடவும் அவர்களுக்கு முழுமையான உரித்துண்டு. ஆனால், அதேசமயம் பௌத்தத்துக்கு முதலிடம் என்றும் கூறப்படுகின்றது. அதன் காரணமாக பௌத்த பிக்குகளும் இராணுவத்தினரும் பொலிஸாரும் ஒன்றிணைந்து ஏனைய மதத் தலங்களை அழித்தொழிப்பதும் அந்த இடங்களில் பௌத்த விகாரையை கட்டுவதுமான செயல்பாடுகளில் கடந்த பல தசாப்தங்களாக ஈடுபட்டு வருகின்றனர்.

யுத்தத்தின் பின்னரான காலப் பகுதியில் வடக்கின் சகல மாவட்டங்களிலும் அதனை போன்றே திருகோணமலையிலும் கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் சிங்கள மக்களோ, பௌத்த மக்களோ வாழாத பிரதேசங்களில் ஏனைய மதத்தலங்கள் இருந்த புராதான இடங்களில் பௌத்த விகாரைகளை நிறுவுகின்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசாங்கத்தின் பூரணமான அனுசரணையுடனும் நிதிப்பங்களிப்புடனும் இந்த விடயங்கள் செயல்படுத்தப்படுகின்றன. கடந்த 8ஆம் திகதி சிவராத்திரியின்போது வவுனியா மாவட்டத்தின் வெடுக்குநாறி மலையில் பல்லாண்டுகாலமாக வீற்றிருக்கும் ஆதிசிவன் கோயிலில் சிவராத்திரியைக் கொண்டாடுவதற்காக கூடியிருந்த சிவபக்தர்களை புத்த பிக்குகளும் பொலிஸாரும் அதிரடிப்படையினரும் அடாவடித் தனங்களில் ஈடுபட்டு அச்சுறுத்தியுள்ளதுடன் பலரைக் கைது செய்துமுள்ளனர் - என்றுள்ளது.

(ஐ)

### கனடாவில் 6 பேர் கொலை:

# இறுதிக்கிரியை செய்வதற்காக உறவினர்கள் அங்கு செல்கின்றனர்!

கொழும்பு, மார்ச் 11

கனடாவின் ஒட்டாவாவில் படுகொலை செய்யப்பட்ட இலங்கையர்களின் உறவினர்கள் அடுத்த சில நாட்களில் அந்த நாட்டுக்கு சென்றடைந்த பின்னர் இறுதிச் சடங்குகளை நடத்த திட்டமிட்டுள்ளதாக கனடாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் ஹர்ஷ நவரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு கனடாவின் ஒட்டாவாவின் புறநகர் பகுதியான பர்ஹாவன் என்ற இடத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 இலங்கையர்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர்.

உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் அவர்களது வீட்டுக்கு அருகில் உள்ள பூங்கா ஒன்றில் அஞ்சலி நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. பர்ஹாவன் பிரதேசவாசிகளால் இந்த அஞ்சலி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ)

# மலையகத்துக்கான ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, மார்ச் 11

நாவலப்பிட்டி மற்றும் இங்குரு ஓயா புகையிரத நிலையங்களுக்கு இடையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை புகையிரத பாதையில் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததால் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பதுளையிலிருந்து இயக்கப்பட்ட விசேட அதிவேக ரயில் இங்குரு ஓயா புகையிரத நிலையத்தில் சில மணி நேரம் நிறுத்தப்பட்டது.

மரம் அகற்றப்பட்ட பின்னர் ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பின.

(ஐ)

# போதைப்பொருள் விருந்து ஆறு பேருக்கு விளக்கமறியல்

கொழும்பு, மார்ச் 11

ஹோமாகம மாகம்மன ஆடம்பர வீடமைப்புத் தொகுதியில் மகளிர் தினத்தன்று இடம்பெற்ற பிறந்தநாளை முன்னிட்டு போதைப்பொருள் விருந்து நடத்திய 27 இளைஞர்களில் போதைப்பொருள் வைத்திருந்த ஐந்து இளைஞர்கள் மற்றும் பணத்தை பெற்றனர் என்று சந்தேகிக்கப்படும் மூன்று யுவதிகள் கெஸ்பாவ நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இவர்களில் 6 பேரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் இஷாரா ஜெயக்கொடி உத்தரவிட்டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களில் பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் அடங்குவார். சந்தேக நபர்களான பெண்களின் சமூக நோய் நிலைய அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

(ஐ)

# அமைச்சர்களின் உறவினர்களுக்கு பதவி வழங்குவதை தடுக்க சட்டம்!

கொழும்பு, மார்ச் 11

அரச நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளுக்கு நபர்களை நியமிக்கும் போதும், அந்த நிறுவனங்களில் உள்ள அரசுக்கு சொந்தமான பங்குகளை தனியாருக்கு வழங்கும் போதும் துறைக்கு பொறுப்பான அமைச்சருக்கு நெருக்கமானவர்கள் மற்றும் உறவினர்களுக்கு அவற்றை வழங்குவதை தடுக்கும் சட்டவிதிகள் அடங்கிய சட்டமூல வரைவு விரைவில் அமைச்சரவையில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை மறுசீரமைப்பது மற்றும் அவற்றை நடத்தி செல்வது சம்பந்தமான ஏற்பாடுகள் அடங்கிய சட்டமூல வரைவு அமைச்சரவையின் அனுமதிக்காக தாக்கல் செய்யப்பட உள்ளது.

அந்த சட்டமூல வரைவு தற்போது இறுதிக்கட்டத்தில் இருப்பதாக கூறப்படுகிறது. அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது சம்பந்தமாக பகிரப்படுத்தப்பட்டுள்ள கொள்கைகளின் அடிப்படையில் இந்த சட்டமூல வரைவு தயாரிக்கப்பட்டு வருகிறது.

அரச நிறுவனங்கள் தொடர்பில் துறைக்கு பொறுப்பான அமைச்சர்கள் சட்டத்திற்கு புறம்பாக செயற்படும் சந்தர்ப்பத்தை தடுப்பது இதன் அடிப்படை நோக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூல வரைவு நிறைவேற்றப்பட்ட பின்னர், துறைக்கு பொறுப்பான அமைச்சர்களுக்கு தேவையான விதத்தில் அமைச்சரவை பத்திரங்களை தாக்கல் செய்து, அரச நிறுவனங்களுக்கு வாகனங்களை கொள்வனவு செய்வதும் இதன் மூலம் தடுக்கப்படும் என கூறப்படுகிறது. (ஐ)

# சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை வடமராட்சி கிழக்கில் 9 பேர் கைது!

வடமராட்சி, மார்ச் 10

சுண்டிக்குளம் - சாலை கடற்பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். இதன்போது, 5 டிங்கி படகுகள் அங்கீகரிக்கப்படாத மீன்பிடி உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக கடற்படையினர் தீவைச் சுற்றியுள்ள கரையோர மற்றும் கடற்பரப்புகளில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 19 முதல் 45 வயதுக்கு உட்பட்ட முல்லைத்தீவு, வெள்ளன் பாலம் மற்றும் புதுமாத்தளன் பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர்.

கைதானவர்கள் சான்றுப் பெருட்களுடன் யாழ்ப்பாணம் நீரியல்வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

(ஐ)

# ஏப்ரலில் ஆட்சி மாற்றம் நாமல் எதிர்கட்சி தலைவர்

## சொல்கிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, மார்ச் 11



எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆட்சி மாற்றம் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாமல் ராஜபக்ஷ எதிர்க்கட்சி தலைவராவார் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதனடிப்படையில், பசில் ராஜபக்ஷவின் நடவடிக்கையின் அடிப்படையில், சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அணி ஒன்று அரசாங்கத்தில் இருந்து விலகி எதிர்க்கட்சிக்கு செல்ல உள்ளது. அத்துடன், நாமல் ராஜபக்ஷ எதிர்க்கட்சி தலைவராகும் வாய்ப்புள்ளது.

மேலும், ரணில் விக்ரமசிங்கவுடன் சஜித் பிரேமதாஸவை இணைக்கும் நடவடிக்கை ஒன்றை இந்தியா மேற்கொண்டு வருகிறது. இதனடிப்படை யில், சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தியினர், தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைக்க உள்ளனர் - என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# நிதி அமைச்சை குழுவிடம் வழங்கினால் பாராளுமன்றுக்கு பொறுப்புக்கூறுவது யார்?

## ஜே. வி. பியிடம் கேட்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு, மார்ச் 11

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் நிதியமைச்சை ஒரு குழுவே நிர்வகிக்கும் என அந்த கட்சியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க கூறியுள்ளார். அப்படி நடந்தால் பாராளுமன்றத்தின் நிதி அதிகாரம் குறித்து பொறுப்புக்கூறுவது யார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சி தலைவரின் பணிமனையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். நிதியமைச்சு சம்பந்தப்பட்ட குழுவில் பாராளு மன்றத்தில் அங்கம் வகிக்காதவர்களும் இருப்பார்கள் என அநுரகுமார கூறுகிறார்.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் சுனில் ஹந்துன்நெத்தியில் நிதியமைச்சர் எனவும் வசந்த சமரசிங்க பொருளாதார விவகார அமைச்சர் எனவும் அநுரகுமார திஸநாயக்க கூறுகிறார்.

குழுக்களால் நாட்டை நிர்வாகம் செய்வதற்காக மக்கள் வாக்களிப்பதில்லை. மக்கள் தெரிவு செய்யும் பிரதிநிதிகளே பாராளுமன்றத்துக்கும், அரசாங்கத்திற்கும் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதியமைச்சு மற்றும் பொருளாதார விவகார அமைச்சு என்பன குழுக்கள் ஊடாக நிர்வாகம் செய்யப்படும் என கூறுவதன் மூலம் தேசிய மக்கள் சக்தியின் தோல்வி தெரிகின்றது - என்றார்.

# நாணய நிதிய பிரதிநிதிகளுடனான சந்திப்பில் எதிர்க்கட்சி பங்கேற்காது!

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

**தேர்தலை இலக்காக் கொண்ட ஜனாதிபதியின் அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்குள் எதிர்க்கட்சி சிக்கிக் கொள்ளாது. சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளுடனான இன்றைய கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி பொதுச் செயலாளர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.**

புதிய கூட்டத்தொடர் ஆரம்பித்த பின்னர் கோப் குழுவின் தவிசாளர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்காது ஆளும் தரப்பில் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான நபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தூய அரசாட்சியை முன்கொண்டு செல்ல விரும்பமில்லாத நிலைப்பாட்டையே ஜனாதிபதியும் அரசாங்கமும் தொடர்ந்தும் காண்பித்து வருகின்றன. மக்களை கோபப்படுத்தும் செயல்பாடுகளையே முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த செயல்பாடுகளுக்கு ஆளும் தரப்பு மக்களுக்கு பொறுப்பு கூற வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடல்களில் பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவரை சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் பல தடவைகள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். சஜித் பிரேமதாஸ தமது நிலைப்பாட்டை சர்வதேச நாணய பிரதிநிதிகளிடமும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்றத்திலும் தமது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

மீண்டும் புதிதாக ஜனாதிபதிக்கு முன்னால் இருந்து கொண்டு எமது நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டிய எந்த தேவையும் எமக்கில்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட உடன்படிக்கைகளை வெளிப்படுத்தவில்லை. உரிய நேரத்துக்கு நாடவில்லை. சேமலாப நிதியங்கள் உழைக்கும் மக்களின் வைப்புத் தொகைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் விதமாக உடன்பாடுகளை எட்டியுள்ளனர்.

எந்த வித கலந்துரையாடலும் இன்றி, இலாபமீட்டும் அரச நிறுவனங்களை தமது நண்பர்களுக்கு விற்கும் போக்கால் உழியர்களே கோபமடைந்துள்ளனர். சகல எதிர்ப்புகளையும் சமநிலைப்படுத்தவே எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். தேர்தலை இலக்காக் கொண்ட ஜனாதிபதியின் அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்குள் எதிர்க்கட்சி சிக்கிக்கொள்ளாது. ஐக்கிய தேசியக் கட்சியும் ரணிலும் எமக்கு எந்தவித சவாலும் இல்லை - என்றார். (ஐ)

# அதிக வறட்சியால் குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது

கொழும்பு, மார்ச் 11

நிலவும் வறட்சியான கால நிலையால் குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. தினசரி தண்ணீர் தேவை அதிகரித்து வருவதே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சில பிரதேசங்களுக்கு குறைந்த அழுத்தத்தின் கீழ் குடிதண்ணீர் வழங்க அல்லது மட்டுப்படுத்தப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தண்ணீர் விநியோகம் மற்றும் புகார்களை தெரிவிக்க தொலைபேசி எண் ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1939 என்ற தொலைபேசி எண்ணுக்கு அழைத்து முறைப்பாடு செய்யலாம்.

இதேவேளை, அம்பத்தலே மற்றும் பியகம நீர் நீரேற்று நிலையங்களுக்குள் உப்பு உட்புகுவதைத் தடுப்பதற்காக அமைக்கப்பட்ட தற்காலிக உப்புத் தடுப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

# 1,550 தொழு நோயாளர் 2023இல் அடையாளம்!

கொழும்பு, மார்ச் 11

சுகாதார அமைச்சின் தேசிய தொழுநோய் அறிக்கையின்படி, 2023ஆம் ஆண்டில் நாட்டில் ஆயிரத்து 550 தொழுநோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி, 2023 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தில் 259 தொழுநோயாளிகளும், கம்பஹா மாவட்டத்தில் 168 தொழு நோயாளர்களும் களுத்துறை மாவட்டத்தில் 116 தொழு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

2019 ஆம் ஆண்டு ஆயிரத்து 660 தொழுநோயாளிகளும், 2020 ஆம் ஆண்டு ஆயிரத்து 213 நோயாளிகளும், 2021 ஆம் ஆண்டு ஆயிரத்து 26 தொழுநோயாளிகளும், 2022 ஆண்டு ஆயிரத்து 401 நோயாளிகளும் கண்டறியப்பட்டுள்ளனர். (ஐ)

# சிறுமி கழுத்தறுத்து கொலை; மைத்துனரே சந்தேகநபர்!

கொழும்பு, மார்ச் 11

கழுத்தறுத்து கொல்லப்பட்ட 17 வயது சிறுமியை அவரின் மைத்துனரே (மூத்த சகோதரியின் கணவரே) கடத்திச் சென்று கொன்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

காலி - தல்கஹாவத்தை - கரந்தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கொலையுண்ட சிறுமி தனது பெற்றோருடன் வசித்து வந்துள்ளார். இதனிடையே, மைத்துனருக்கும் அவருக்கும் இரகசிய உறவு ஏற்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் எல்பிட்டியில் வாடகை வீட்டில் வசித்துள்ளனர்.

பின்னர் இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தால் யுவதி தனது தாய் வீட்டுக்குத் திரும்பியுள்ளார்.

இந்நிலையில், மைத்துனர் அவரை தொடர்ந்து அச்சுறுத்தல் தொடர்பில் கடந்த 4ஆம் திகதி கரந்தெனிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளுக்காக கடந்த 8ஆம் திகதி பொலிஸ் நிலையத்துக்கு சென்று கொண்டிருந்தபோது சந்தேக நபர் மேலும் பலருடன் ஓட்டோவில் வந்து சிறுமியை கடத்தி சென்றுள்ளார்.

சிறுமியை கடத்திச் சென்ற சந்தேக நபரே இந்தக் கொலையை செய்தார் என்றும் அவர் தற்போது பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்றும் பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டி மற்றும் கரந்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நாட்டை விட்டு தப்பிய குற்றவாளிகளை கைது செய்து கொண்டுவர நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 11

நாட்டை விட்டு தப்பிச் சென்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்கும்பலை சேர்ந்த 600 பேரை கைது செய்து கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு இராஜதந்திர மட்டத்திலும், தூதுவர் மட்டத்திலும் கருத்துகள் பரிமாறப்பட்டு வருவதுடன், கலந்துரையாடல்கள் வெற்றியடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலக செயல் பாடுகளில் ஈடுபடும் எந்தவொரு குற்றவாளிகளும் டுபாய் உள்ளிட்ட பிற நாடுகளுக்கு தப்பிச் செல்ல முடியாத வகையில் நாட்டில் பாதுகாப்பு வலையமைப்பை நிலைநிறுத்துவதற்கு பாதுகாப்பு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

நாட்டில் பலர் குற்றச்செயல்களில் ஈடுபட்டு மிக இலகுவாக டுபாய் மற்றும் இந்தியாவுக்கு தப்பிச் செல்கின்றனர். அவர்கள் அந்த நாடுகளுக்குள் நுழைவதைத் தடுப்பதில் அதிகாரிகள் கவனம் செலுத்தியுள்ளனர். (ஐ)

# கைபேசிக்கு அடிமையான சிறாரை மீட்பது இலகுவல்ல!

கொழும்பு, மார்ச் 11

கைபேசி வழியே இணையத் தளங்களுக்கு அடிமையான சிறுவர்களை ஒரேநாளில் மீட்பது சாத்தியமில்லை என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

குழந்தைகளை வேறு பணிகளுக்கு வழிநடத்துவதன் மூலம் அவர்கள் கையடக்கத் தொலைபேசி மற்றும் இணையத்தளத்திற்குத் திரும்புவதைத் தடுக்க முடியும் என அதன் தலைவர் தெரிவித்தார்.

கனடாவில் வீடொன்றில் வைத்து 6 இலங்கையர்கள் கொல்லப்பட்ட சம்பவத்துடன், சிறுவர்கள் கைபேசி மற்றும் இணையத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் மீண்டும் விவாதம் எழுந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# நீலங்களின் சமர் போட்டியை கண்டுகளித்த ஜனாதிபதி!

கொழும்பு, மார்ச் 11

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீலங்களின் சமர் என்று அழைக்கப்படும் கொழும்பு றோயல் கல்லூரி, புனித தோமஸ் கல்லூரி அணிகளின் துடுப்பாட்டப் போட்டியை கண்டு களித்தார்.

கொழும்பு எஸ். எஸ். சி. மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனும் பங்கேற்றார்.

றோயல் கல்லூரி, புனித தோமஸ் கல்லூரியின் பழைய மாணவர்களான இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன, முன்னாள் அமைச்சரான ரவி கருணாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான மகிந்தானந்த அலுத்கமகே, ஹர்ஷ டி சில்வா மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். (ஐ)

# கடுவலை மாநகர வேட்பாளர் போதைப்பொருளுடன் கைது

கொழும்பு, மார்ச் 11

கொழும்பு - கடுவலை மாநகர சபைக்கு வேட்பாளராக களமிறங்கிய ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக மீகொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீகொடை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பனாகொட வெலிபில்லவ பிரதேசத்தை சேர்ந்த 42 வயதுடையவராவார். (ஐ)

# அணையாடை பாவனையை 40 வீத பெண்கள் நிறுத்தினர்

## பொருளாதார நெருக்கடியே காரணம்

கொழும்பு, மார்ச் 11

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் சுமார் 40 வீதமான பெண்கள் சுகாதார அணையாடை (நாப்கின்) பாவனையை இடைநிறுத்தியுள்ளனர் என்று 'எட்வகாட்டா' என்ற அமைப்பு அண்மையில் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

நாட்டில் 15 - 47 வயதுக்கு இடைப்பட்ட பெண்களில் 40 வீதமானவர்கள் சுகாதார அணையாடை பாவனையை நிறுத்தியுள்ளதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

2019 ஆம் ஆண்டில் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் நடத்தப்பட்ட குடும்ப வருமானம் தொடர்பான அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. (ஐ)

### வெடுக்குநாறிமலையில் அடக்குமுறை

## மட்டக்களப்பில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம்!





**மட்டக்களப்பு, மார்ச் 11**

**வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி பூசைகளை குழப்பும்விதமாக பொலிஸார் மேற்கொண்ட அத்துமீறலுக்கு எதிர்ப்பு தெரிவித்து மட்டக்களப்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.**

மட்டக்களப்பு நகரின் காந்தி பூங்காவில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நீதிமன்ற அனுமதியுடன் சிவராத்திரி பூசைகள் நடைபெற ஏற்பாடாகின. சிவராத்திரி தின பூசைகளை குழப்பும்விதமாக பொலிஸார் அங்கு செயல்பட்டனர். இதன்போது, ஆலய பூசகர் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதனைக் கண்டித்தே மட்டக்களப்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன்போது, “எங்கள் மண்ணில் எங்கள் மலையில் உங்களுக்கு உரிமையில்லை”, “சிவராத்திரி நாளிலும் சிங்கள அடக்குமுறை” போன்ற பதாதைகளை ஏந்தியவாறு இந்து, கிறிஸ்தவ மதகுருமார், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (ஐ)

## தென்எருவில்பற்று பிரதேச செயலக மகளிர் தினவிழா!



மட்டக்களப்ப, மார்ச் 11

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் மகளிர் தினவிழா பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நடைபெற்றது.

மகளிர் தின விழாவின் மூன்றாவது நிகழ்வாக மகளிருக்கான “மனைப் பொருளாதார முகாமைத்துவ செயலமர்வானது” நேற்று முன்தினம் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றுது.

இந்த நிகழ்வின் வளவாளர்களாக தங்கவேல் சக்திவேல் (முதன்மை பயிற்றுவிப்பாளர், நிபுணத்துவ ஆலோசகர் மற்றும் திருமதி சக்தீஸ்வரி சக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த செயலமர்வில் பிரதேச செயலக பிரிவிலிருந்து திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் தெரிவு செய்யப்பட்ட 35 பயனாளிகள் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

## கிண்ணியா மத்திய கல்லூரிக்கு சஜித்தால் பேருந்து அன்பளிப்பு



திருகோணமலை, மார்ச் 11

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவால் கிண்ணியா மத்திய கல்லூரிக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை பேருந்து வழங்கி வைக்கப்பட்டது.

சஜித் பிரேமதாசாவின் பிரபஞ்சம் வேலை திட்டத்தின் கீழ் இந்தப் பேருந்து வழங்கி வைக்கப்பட்டது.

கல்லூரியின் அதிபர் ஏ.எச். எம் நஜாத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கல்வி அதிகாரிகள் பிரதேச செயலாளர் பிரிவின் அதிகாரிகள் உட்பட பலன் கலந்து கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப்பின் வேண்டுகோளுக்கு இணங்க ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவால் இந்தப் பேருந்து வழங்கி வைக்கப்பட்டது. (ஐ)

## கோணேஸ்வர பெருமான் நகர்வலம் இன்று இருப்பிடத்தை அடைவார்!

திருகோணமலை, மார்ச் 11

திருக்கோணேஸ்வர பெருமானின் நகர்வலம் இன்று திங்கட்கிழமை மீண்டும் ஆலயத்தை அடையவுள்ளது.

வரலாற்று சிறப்புமிக்க திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் சிவராத்திரி தினத்துக்கு மறுநாள் பெருமான் மாதுமை அம்பாள் சமேதராக நகர்வலம் வருவது வழமை. முழுமையாக மூன்று தினங்கள் நடக்கும் இந்த நகரவலம் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

திருகோணமலை நகரிலுள்ள அனைத்து ஆலயங்களுக்கும் செல்லும் பெருமான் அந்த ஆலயங்களில் தரித்து நிற்பதும் வழக்கம். கோணேஸ்வர பெருமானை நிறைகுடம் வைத்து பக்தியுடன் மக்கள் இன, மத பேதமின்றி வரவேற்பதும் வழமையாகும்.



நேற்றைய தினம் பாலையூற்று பாலமுருகன் ஆலயத்தில் தரித்து நின்ற பெருமான் இன்றைய தினம் மீண்டும் நகர்வலத்தை ஆரம்பித்து தனது இருப்பிடத்தை வந்தடைவார். (ஐ)

## தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் மகளிர் தின நிகழ்வு!

மட்டக்களப்பு, மார்ச் 11

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்களின் உரிமைகள் சம்பந்தமாக பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் “தாயாககரம் கொடுப்போம்” என்னும் தொனிப்பொருளில் அமைவாக சர்வதேச மகளிர் தின விழிப்புணர்வு ஊர்வலம் மட்டக்களப்பு லேக் வீதியில் உள்ள கட்சியின் பணிமனையிலிருந்து ஆரம்பமாகி நகரின் பிரதான வீதிகள் ஊடாகச் அரசடி வரை பயணித்தது.

இதன்போது, கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் நேற்று முன்தினம் நடந்த இந்த நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் மகளிர் அணி உறுப்பினர்கள், கட்சியின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

விழிப்புணர்வு பேரணியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெருமளவிலான பெண்கள் கலந்து கொண்டதுடன் சர்வதேச மகளிர் தினத்தில் தங்களது உரிமைகள் பாதுகாப்பு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியிருந்தனர். (ஐ)

## 2024இல் ஜனாதிபதி தேர்தலை நடத்தியே ஆகவேண்டும்!

### பவ்ரல் அமைப்பு

காரைதீவு, மார்ச் 11

ஒக்ரோபர் 16 ஆம் திகதி தேர்தலை நடத்தும் அதிகாரம் தேர்தல் ஆணைக் குழுவிடம் வந்துவிடும். இதன் பின்னர் பாராளுமன்றமோ அல்லது ஜனாதிபதியோ தேர்தலில் தலையிடும் அதிகாரம் இருக்காது. இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடத்தியே ஆக வேண்டும் - இதில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் - பவ்ரல் அமைப்பின் தேசிய இணைப்பாளர் என். சத்யராஜ் தெரிவித்தார்.

மார்ச் 12 இயக்க அம்பாறை மாவட்ட ஆரம்ப கூட்டம் மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன் தலைமையில் நேற்று முன்தினம் சேனைக் குடியிருப்பில் நடந்தது. இங்கு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிதியின்மை போன்ற காரணங்களை காட்டி உள்ளூராட்சி தேர்தல் பிற்போடப்பட்டது. இருந்தபோதிலும் எதிர்வரும் ஒக்ரோபரில் தேர்தல் நடத்தியாக வேண்டும் . அதற்கு முன்பு பாராளுமன்ற தேர்தல் நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. எனவே, நாம் 25 மாவட்டங்களிலும் மக்கள் விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

## சிகரெட்களை கடத்திய சிப்பாய்கள் இருவர் கைது

அக்கரைப்பற்று, மார்ச் 11

சட்டவிரோதமாக கொண்டு சென்ற 13 ஆயிரத்து 500 சிகரெட்களுடன் இராணுவ சிப்பாய்கள் இருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் இந்த சிகரெட்களை கொழும்பிலிருந்து அம்பாறைக்கு சட்டவிரோதமாக கொண்டுசென்றிருந்தனர். அம்பாறையில் உள்ள பேருந்து தரிப்பிடம் அருகே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக அம்பாறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

ஈழநாடு



### நெருங்குகிறது ரமழான்:

# இழுபறி நிலையில் போர் நிறுத்தம் ஜெருசலேமில் அச்சநிலை உயர்வு!

ஜெருசலேம், மார்ச் 11

**ஹமாஸ் - இஸ்ரேல் போர் நிறுத்தம் இழுபறி நிலையில் உள்ளது. இதனிடையே, இஸ்லாமியர்களின் புனித மாதமான ரமழான் இன்று ஆரம்பமாகிறது. இந்தக் காலத்தில் ஜெருசலேமில் வன்முறை பரவும் என்ற அச்சம் மீண்டும் எழுந்துள்ளது.**

அல் - அக்ஸா பள்ளிவாசலுக்கு வருகை தரும் பலஸ்தீனர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று ஹமாஸ் வலியுறுத்தியுள்ளது.

ரமழானின்போது இந்தப் பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்த ஹமாஸ் முயன்று வருகிறது என்று இஸ்ரேல் குற்றஞ்சுமத்தியுள்ளது.

அல் - அக்ஸா பள்ளிவாசல் இஸ்லாமியர்களின் மூன்றாவது புனித ஆலயமாகும். ஆனால், இது யூத மதத்தினருக்கும் புனிதமான இடமாகும். இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் ஏற்படும் காலத்தில் இந்தத் தலமும் முக்கியமான காரணியாக உள்ளது.



எகிப்தில் முன்னெடுக்கப்படும் ஹமாஸ் - இஸ்ரேல் பேச்சு ஒரு வாரம் ஒத்திவைக்கப்பட்ட நிலையில், போர் நிறுத்தம் என்பது கேள்விக்குறியாகி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




# 71ஆவது உலக அழகியாக செக் நாட்டின் பெண் தெரிவு

மும்பை, மார்ச் 11

2024ஆம் ஆண்டுக்கான உலக அழகிப் பட்டத்தை செக் குடியரசு நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டினா பிஸ்கோவா என்ற பெண் வென்றுள்ளார்.

71வது உலக அழகிப் போட்டி மும்பையில் நடைபெற்றது. 28 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் நடக்கும் உலக அழகிப் போட்டியாக இது அமைந்தது.

இந்த போட்டியில் செக் குடியரசு நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டினா பிஸ்கோவா என்ற பெண் உலக அழகியாக அறிவிக்கப்பட்டார். இவர் 115 நாடுகளைச் சேர்ந்த அழகிகளை எதிர்த்து போட்டியிட்டார்.

கடந்த ஆண்டு உலகி அழகிப் பட்டம் வென்ற போலந்து நாட்டைச் சேர்ந்த கரோலினா பிலாவ்ஸ்கா கிறிஸ்டினாவுக்கு மகுடம் சூட்டி கௌரவித்தார். 24 வயதாகும் கிறிஸ்டினா, மொடலாக இருந்து கொண்டே சட்டம் மற்றும் வணிக நிர்வாகம் ஆகிய பாடங்களில் பட்டக் கல்வியை பயின்று வருகிறார்.

# பாகிஸ்தான் ஜனாதிபதியாக அலி சர்தாரி தெரிவானார்!



இஸ்லாமாபாத், மார்ச் 11

பாகிஸ்தான் நாட்டின் ஜனாதிபதியாக ஆசிப் அலி சர்தாரி தெரிவாகியுள்ளார். இன்று திங்கட்கிழமை அவர் 14ஆவது ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

பொருளாதார நெருக்கடியில் தவித்து வரும் பாகிஸ்தானில் கடந்த மாதம் 8ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடந்தது. 265 இடங்களில் 133 ஆசனங்கள் ஆட்சி அமைக்க தேவை என்ற நிலையில், எவருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இதனை தொடர்ந்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியும் பாகிஸ்தான் மக்கள் கட்சியும் இணைந்து கூட்டணி அரசு அமைத்தன.

நவாஸ் ஷெரீப்பின் சகோதரர் ஷெபாஸ் ஷெரீப் பிரதமர் வேட்பாளராகவும் ஆசிப் அலி சர்தாரி ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டனர்.

ஆசிப் அலி சர்தாரிக்கு எதிராக இம்ரான் கான், பஷ்துன்க்வா மில்லி அவாமி கட்சியின் தலைவர் முகமது கான் அசாக்சாயை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில், ஆசிப் அலி சர்தாரிக்கு 255 வாக்குகள் கிடைத்தன. முகமது கான் அசாக்சாய்க்கு 119 வாக்குகள் கிடைத்தன. இதன்படி அதிக வாக்குகளைப் பெற்ற ஆசிப் அலி சர்தாரி பாகிஸ்தானின் 14ஆவது ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார்.

68 வயதாகும் ஆசிப் அலி சர்தாரி, 2ஆவது முறையாக பாகிஸ்தான் ஜனாதிபதியாக இன்று பதவியேற்பார். (ஐ)

# சீனாவுடனான எல்லை பகுதியில் படைகளை குவித்தது இந்தியா!

புதுடில்லி, மார்ச் 11

இந்தியா - சீனா இடையே எல்லை மோதல் நீடிக்கும் இமாச்சல் பிரதேசத்தில் 10 ஆயிரம் படையினரை இந்தியா குவித்துள்ளது. இதற்கு கண்டனம் தெரிவித்துள்ள சீனா, இந்தியாவின் இந்த நடவடிக்கை பதற்றத்தை தணிப்பதற்கு உதவாது", என்று கூறியுள்ளது.

சீனா ஆக்கிரமித்துள்ள திபெத் பகுதியில் இருந்து வட இந்திய மாநிலங்களான உத்தரகாண்ட் மற்றும் இமாச்சல பிரதேசத்தை பிரிக்கும் 532 கிலோ மீற்றர் எல்லை பகுதி இந்த படையினரின் பாதுகாப்பில் இருக்கும் என்று இந்திய தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் எல்லைப் பகுதிகளில் அமைதி மற்றும் உறுதியை பாதுகாக்க இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற சீனா உறுதிபூண்டுள்ளது. எனினும், இந்தியாவின் நடவடிக்கை அமைதியைப் பாதுகாக்கவோ அல்லது பதற்றத்தைத் தணிக்கவோ உதவாது எனவும் சீன



வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் கூறியுள்ளார்.

எல்லையில் நடக்கும் எந்த தாக்குதலையும் எதிர்கொள்ள இந்தியா தயாராக இருப்பதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியதை அடுத்து இந்திய - சீன எல்லையில் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியா மீது யாராவது தாக்குதல் நடத்தினால், இந்திய இராணுவம் பலத்த பதிலடி கொடுக்கும். இந்தியா யாருடைய நிலத்தையும் ஆக்கிரமிக்கவில்லை. ஆனால், இந்தியாவை யாராவது தாக்கினால், அதற்கு தகுந்த பதிலடி கொடுக்க இந்தியா தயாராக உள்ளது." என்றும் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். (ஐ)

### - காசாவில் விமானம் மூலம் போடப்பட்ட -

# உணவுப் பொதி விழுந்ததில் 5 பேர் மரணம்; 10 பேர் காயம்!

காசா, மார்ச் 11

பலஸ்தீனத்தின் வடக்கு பகுதியில் வான்வழியாக மனிதாபிமான உதவிகள் வழங்கிய போது ஏற்பட்ட பராசூட் விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர் என்று என்று காசா நகர மருத்துவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

விபத்தில் காயமடைந்தவர்கள் காசா நகரின் அல் ஷிஃபா மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர். இந்த விபத்து கடற்கரை அருகிலுள்ள அல் - ஷாதி அகதிகள் முகாம் அருகில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்து குறித்து நேரில் பார்த்த சாட்சியான முகம்மது அல் கோல் கூறுகையில், "நானும் எனது சகோதரனும் உணவு பொதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில், வானத்தில் இருந்து கீழிறங்கிய பராசூட்களை பின் தொடர்ந்தோம். அப்போது திடீரென பராசூட்கள் திறக்காமல், அங்கிருந்த வீட்டின் கூரை மீது அதிவேகத்தில் விழுந்தன. அந்த வீட்டுக்கு நாம் சென்ற போது உயிரிழந்தவர்களின் சடலங்களையும் காயமடைந்தவர்களையோம் அங்கிருந்தவர்கள் மீட்டதை கண்டோம்", என்றார்.

5 மாதங்களுக்கு மேலாக காசாவில் போர் நீடிக்கிறது. இலட்சக்கணக்கான மக்கள் உணவு, தண்ணீர் இன்றி பட்டினியால் வாடுகின்றனர். அமெரிக்கா, ஜோர்தான் நாடுகள் அங்கு பராசூட்கள் மூலமாக உணவுப் பொதிகளை போட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சீனாவுடன் நாம் போட்டியையே விரும்புகிறோம் மோதலை அல்ல!

### அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்

வாஷிங்டன், மார்ச் 11

சீனாவுடன் அமெரிக்கா போட்டியை விரும்புகிறது - மோதலை அல்ல - என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார்.

மேலும், சீனாவுடன் அமெரிக்கா போட்டியை விரும்புகிறது - மோதலை அல்ல. சீனாவுக்கு எதிரான போட்டியில் வெற்றிபெற அமெரிக்கா வலுவான நிலையில் உள்ளது. சீனாவின் நியாயமற்ற பொருளாதார நடைமுறைக்கு எதிராக நாங்கள் நிற்கிறோம், தைவான் பகுதியில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்காக நிற்கிறோம்.

இந்தியாவுடனான கூட்டாண்மைக்கு எங்கள் ஆட்சியில் புத்துயிர் அளித்துள்ளோம். சீனா முன்னேறி வருகிறது, அமெரிக்கா பின்தங்குகிறது என்று சிலர் கூறுகிறார்கள். அமெரிக்கா தொடர்ந்து உயர்ந்து வருகிறது. உலகின் சிறந்த பொருளாதாரத்தை அமெரிக்கா கொண்டுள்ளது - என்றார். (ஐ)

# ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து பரந்த கூட்டணி அமைக்க பேச்சு

**குமார வெல்கம தெரிவிப்பு**

*** சந்திரிகா, சம்பிக்க, லன்ஸா, மைத்திரியுடன் பேச்சு**

*** ஐ. தே. க., சஜித் தரப்பு, பெரமுனவுடனும் பேச முடிவு**

*** பொது எதிரி ஜே. வி. பியை தோற்கடிப்பதே நோக்கம்**



கொழும்பு, மார்ச் 11

**சந்திரிகாவின் ஆலோசனையின்பேரில் பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைப்பது குறித்து கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று புதிய சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம தெரிவித்துள்ளார்.**

அத்துடன், எமது பொது எதிரியான ஜே. வி. பியை தோற்கடிப்பதிலும் கரிசனைகளைக் கொண்டுள்ளோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ளும் நோக்கிலேயே இந்தக் கூட்டணியை நிறுவும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசனையில், ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க, புதிய கூட்டணியின் ஏற்பாட்டாளர் நிமல் லன்சா, மற்றும் சுதந்திரக் கட்சியின் மைத்திரிபால சிறிசேன ஆகிய தரப்பினருடன் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தரப்பினருடன் இன்னமும் இறுதியான முடிவுகள் எடுக்கப்படவில்லை. எனினும் ஆரம்பகட்ட கலந்துரையாடல்கள் நேர்மறையாக உள்ளன.

இதேவேளை, அடுத்துவரும் நாட்களில் ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன, மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய தரப்பினருடன் பேச்சுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

என்னைப் பொறுத்தவரையில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க மீண்டும் ஜனதிபதி பதவிக்காக போட்டியிடுவதற்கு முன்வருவாராக இருந்தால் எமது கூட்டணி அவரை பொதுவேட்பாளராக ஏற்றுக்கொண்டு ஆதரிப்பதற்கு தயாராக உள்ளது. தற்போதைய நிலையில் நாம் ரணில் விக்கிரமசிங்கவின் முடிவை எதிர்பார்த்துள்ளோம்.

ஆகவே அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை உத்தியோகபூர்வமாகவும் - பொது வேட்பாளராக களமிறங்க தயார் என்றும் அறிவிக்க வேண்டிய தீர்மானத்தை எடுக்க வேண்டியவராக உள்ளார். அவரின் முடிவுக்காக காத்திருக்கும் நாம், எமது பொது எதிரியான ஜே. வி. பியை தோற்கடிப்பதிலும் கரிசனைகளைக் கொண்டுள்ளோம் - என்றார்.

(ஐ)

# துப்பாக்கிசூட்டில் ஒருவர் படுகாயம்!




கொழும்பு, மார்ச் 11

துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கம்பஹா - ஜா - எல, தடுகம - பஸ்வத்தை பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சைகளுக்காக ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இருவரே துப்பாக்கி பிரயோகத்தை நடத்திவிட்டு தப்பிச் சென்றனர். இந்த சம்பவம் தொடர்பில் ஜா- எல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரணிலின் பதவிக்காலம் 3 மாதங்களில் முடியும்!

*ஹர்ஷ டி சில்வா சுட்டுக்காட்டு*

கொழும்பு, மார்ச் 11

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்காலம், அரசமைப்பின் பிரகாரம் முடிவடையும் நிலையிலுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு மாத்திரமே அவரால் பதவி வகிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை ரணில், சர்வதேச கடன் வழங்குனர்களுடன் தற்போது பேச்சு நடத்தி புதிய ஒப்பந்தம் ஒன்றை எட்டவுள்ளதாகவும் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு புதிய ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்ட பின்னர், நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படுமாயின் நாடு பெரும் சிக்கல் நிலையை எதிர்நோக்கும்.



புதிய அரசாங்கம் குறித்த ஒப்பந்தத்தைக் கொண்டு செல்வதில் சிக்கல் நிலையை எதிர்கொள்ளும்போது பெரும் பொருளாதார சிக்கல்களை உருவாக்கிவிடும் - என்றும் பொருளாதார நிபுணருமான ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார்.

(அ-ஐ)

# 2028இற்கு பின்னர் மாணவர்கள் சகலருக்கும் உயர்கல்வி வாய்ப்பு

*கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த*



கொழும்ப, மார்ச் 11

2028ஆம் ஆண்டுக்குப் பின்னர் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் எவருக்கும் தோல்வி ஏற்படாது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மின்சார சைக்கிள்களை கிராமங்களுக்கு விநியோகிக்கும் நிகழ்வில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், கல்வி அல்லது தொழில் பயிற்சியை பின்பற்றும் அனைத்து மாணவர்களும் க. பொ. த. சாதாரண தரத்துக்கு பிறகும் பாடசாலையில் கல்வி கற்க அமைச்சு அனுமதியளிக்கும்.

அதன்படி, குழந்தைகள் தங்கள் பாடசாலைகளை விட்டு வெளியேற வேண்டிய அவசியமில்லை. ஆனால், அவர்களின் கல்வி அல்லது தொழில் பயிற்சியுடன் மேலும் இரண்டு ஆண்டுகள் தொடரலாம். பின்னர், அவர்கள் தொழில் பயிற்சி திட்டங்களுக்கு அனுப்பப்படுவார்கள்.

“பெரும்பாலான திட்டங்களை நாங்கள் புதுப்பித்துள்ளோம். மொத்தம் 43 இலட்சம் மாணவர்கள் தற்போது 10 ஆயிரத்து 126 அரச பாடசாலைகளிலும், 300க்கும் மேற்பட்ட சர்வதேச பாடசாலைகளிலும், 110க்கும் மேற்பட்ட தனியார் பாடசாலைகளிலும் படித்து வருகின்றனர்.

இப்போது நாங்கள் கல்வி திட்டத்தை மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளோம். கடந்த 75 ஆண்டுகளாக, நாங்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்ததால், நாங்கள் ஆங்கிலேயர்கள் அறிமுகப்படுத்திய பாடத்திட்டத்தைப் பின்பற்றினோம்,” என்று அமைச்சர் கூறினார்.

பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வியில் இருந்து நடைமுறைக்கு மாறுவதற்கு அல்லது தொகுதிகளை அறிமுகப்படுத்துவதற்கு நாங்கள் விரும்புகிறோம் - என்றார்.

(ஐ)

# தெருநாய்களின் எண்ணிக்கை குறித்து இராஜாங்க அமைச்சர் பொய் கூறுகிறார்

*கால்நடை மருத்துவர்கள் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 11

நாட்டில் 60 இலட்சத்துக்கும் அதிகமான தெருநாய்கள் உள்ளன. சுற்றுலா பகுதிகளில் அவை மக்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றன என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித்த பண்டார தென்னக்கோனின் கருத்துக்கு கால்நடை மருத்துவர்கள் சங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் தெருநாய்களின் எண்ணிக்கையை மிகைப்படுத்தி கூறியுள்ளார். எந்த தரவுகளின் அடிப்படையிலும் இல்லாத எண்ணிக்கையை அமைச்சர் மேற்கோள் காட்டுகிறார் என்று கால்நடை மற்றும் மனிதநேய முகாமைத்துவத்துக்கான மருத்துவர்களின் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சமித் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

“2007ல் 30 இலட்சம் நாய்கள் இருந்தன. அப்போதுதான் அரசும் பல தனியார் அமைப்புகளும் கருத்தடை இயக்கத்தை ஆரம்பித்தன. இந்தத் திட்டங்களின் விளைவாக நாய்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தது, இப்போது நாட்டில் 21 இலட்சத்துக்கும் குறைவான நாய்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை உரிமையாளர்களால் வளர்க்கப்படுகின்றன” என்றார்.

இராஜாங்க அமைச்சர் பண்டார, நாட்டில் 62 இலட்சம் தெருநாய்கள் இருக்கின்றன என்று கூறுகிறார் , இது நாட்டிலுள்ள அனைத்து நாய்களை விடவும் கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகம் என்றும் நாணயக்கார கூறினார்.

மேலும், விலங்கு நல அமைப்புகள் ஆண்டுதோறும் 35 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரையான விலங்குகளுக்கு கருத்தடை அறுவை சிகிச்சைகளை மேற்கொள்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# ‘கப்புட்டு காக்கா’ நூலை எழுதுங்கள் !

*பஸிலிடம் வசந்த முதலிகே கோரிக்கை*

கொழும்பு, மார்ச் 11

சிறுவர் கதையாக ‘கப்புட்டு காக்கா’ எனும் நூலை எழுதுமாறு பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நிதியமைச்சருமான பஸில் ராஜபக்ஷவிடம் மக்கள் போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டாளரான வசந்த முதலிகே கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எழுதிய ‘என்னை ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேற்ற சதி’ என்ற புத்தகம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே வசந்த முதலிகே இவ்வாறு தெரிவித்தார்.

பஸில் ராஜபக்ஷ தற்போது நாடு திரும்பியுள்ளதால் சிறுவர் கதையாக ‘கப்புட்டு காக்கா’ எனும் நூலை எழுதுமாறு கோரிக்கை விடுப்பதுடன் அவரால் இதைச் செய்யமுடியும் எனவும் நகைச்சுவைப் பாணியில் அவர் கருத்து வெளியிட்டார்.

‘மிக்’ விமான கொடுக்கல் வாங்கல், ரணில் விக்கிரமசிங்கவைத் தலையில் தூக்கி வைத்துப் பயணிக்கும் அரசியல் பயணம் தொடர்பிலும் ராஜபக்ஷக்கள் நூலை எழுதினால் நல்லது. அப்போதுதான் கோட்டாபயவால் எழுதப்பட்ட நூல் முழுமை பெறும் எனவும் தெரிவித்தார்.

## உள்ளூராட்சி...

அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித் துள்ளார்.

இதன்படி, உள்ளாட்சி நிறுவனங் களில் பணியாற்றும் 8,400 தற்காலிக பணியாளர்கள் நிரந்தர நியமனம் செய் யப்படவுள்ளனர். (ஐ)

## படை...

படைகளின் வசமுள்ள மக்களின் காணிகளில் ஒருபகுதியை உரியவர் களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று யாழ்ப் பாண மாவட்ட செயலகத்தில் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி அலுவலகத்தின் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானியுமான சாகல ரத்நாயக்க கலந்துகொண்டு காணி உரிமையாளர் களுக்கான காணிப் பத்திரங்களை வழங்கிவைத்தார்.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவா னந்தா, யாழ்ப்பாண படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமரட்ண, ஜனாதிபதி செயலக வட மாகாண இணைப்பாளர் எல். இளங்கோவன், முன்னாள் அரசாங்க அதிபர்கள், படை யினர், கடற்படையினர், பிரதேச செய லாளர்கள், ஜனாதிபதி செயலக உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## விமான...

இதன்போது, ஜனாதிபதியின் பாது காப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க, விமானப் படை தளபதி உதேனி ராஜ பக்ஷ உள்ளிட்ட விமானப் படையின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பல்வேறு சாகசங்கள், கலை நிகழ்ச்சி கள் நிகழ்த்தப்பட்டன. பெருமளவான பார்வையாளர்களும் திரண்டிருந்தனர். (ஐ)

## விமான படையில்...

விமானப் படை நடத்தி வரும் கண் காட்சியில் நேற்றுமுன்தினம் பங் கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், விமானப் படையின் 73ஆவது வருட நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கண் காட்சிக்கு யாழ்ப்பாண மக்களால் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. இது எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. ஒரேநாளில் மாத்திரம் இந்த கண்காட்சிக்கு சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கு பற்றியிருந்தார்கள். இந்த நிகழ்வை ஏற் பாடு செய்தவர்களுக்கு நன்றி கூற கட மைப்பட்டிருக்கிறேன்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களும் இந்த கண்காட்சியில் பங்கேற்றுள்ளமை பாராட்டத்தக்க விடயம். இங்குள்ள மக்களுடன் பேச்சுக்களை முன்னெடுத் துள்ளோம். எதிர்காலத்தில் யாழ்ப்பா ணத்தை சேர்ந்த விமானிகளும் விமானப் படையின் ஓர் அங்கமாக இருக்க வேண் டும் - என்றார். (ஐ)

# பொலிஸ் அற்ற அதிகார பரவலாக்கம் தமிழருக்கு அச்சுறுத்தலாக இருக்கும்!

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

கொழும்பு, மார்ச் 11

பொலிஸ் அதிகாரம் இல்லாத ஏனைய அதிகார பரவலாக்கம் தமிழர்களுக்கு அச்சுறுத்தலாகவே அமையும் என்று பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறிமலையில் இடம் பெற்றதாக கூறப்படும் பொலிஸ் அடா வடிதனத்தை கண்டித்து மட்டக் களப்பில் நேற்று நடந்த ஆர்ப்பாட்டத் தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கும்போதே அவர் இதனை குறிப் பிட்டார்.

ஜனாதிபதி 13ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை பரவலாக்கதுக்கு தயா ராக உள்ளார் என்று கூறுகிறார். ஆயி னும், எந்த அதிகாரம் பரவலாக்கப்பட் டாலும் அதனை தடுத்து நிறுத்துவதற்கு பொலிஸ் அதிகாரம் தயாராக உள்ளது - என்றார். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 8இல்)

# ரமழானை தீர்மானிக்கும் மாநாடு!

கொழும்பு, மார்ச் 11

ஹிஜ்ரி 1445 புனித ரமழான் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் பிறைக் குழு மாநாடு இன்று திங்கட்கிழமை மாலை மஹ்றிப் தொழுகையை தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசல், அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா, முஸ்லிம் சமய பண் பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள் மற்றும் உலமாக்கள் பங்கேற்கின்றனர்.

நாட்டின் எப்பிரதேசத்திலாவது ரமழான் மாத தலைப்பிறை தென்பட் டால் தகுந்த ஆதாரங்களுடன் 011 243 2110, 011 245 1245, 077 731 6415 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு கொழும்பு பெரிய பள்ளி வாசல் இஸ்லாமிய மக்களை கேட்டுள் ளது. (ஐ)

## ஐக்கிய மக்கள் சக்தி...

முன்னர் நாங்கள் இருந்த நிலை அனை வருக்கும் தெரியும். என்றாலும் தற்போது அந்த நிலையை எங்களால் மாற்றியமைக்க முடியுமாக இருக்கிறது. அரச ஊழியர்களுக்கு ஏப்ரல் மாதத்தில் இருந்து 10ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. அதேபோன்று 24 இலட்சம் குடும்பங்க ளுக்கு அஸ்வெசும நிவாரணம் வழங்க வுள்ளோம்.

அத்துடன், 2020 தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி பிளவுபட்டது. அதன் கார ணமாக நாங்கள் தேர்தலில் தோல்விய டைந்தோம். என்றாலும் தேர்தலில் நாங்கள் உண்மை விடயத்தை மக்க ளுக்கு தெரிவிப்போம். இதன் மூலம் சில காலம் செல்லும் போது எங்களுக்கு அரசாங்கத்தை அமைக்க சந்தர்ப்பம் கிடைக்கும் என நான் தெரிவித்தேன். ஆனால், எனது கருத்துக்கு சிலர் இணங்கவில்லை. அதனால் அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொண்டனர். ஆனால், நாங்கள் எமது தேர்தல் பிரசாரத்தில் பல உண்மைகளை தெரிவித்தோம். அதாவது 2023ஆகும் போது நாடு 7 இலட்சம் கோடி ரூபாயை இழக்கும் அதேநேரம் 3 இலட்சம் கோடி ரூபாய் எமக்கு தேவைப்படும் எனத் தெரிவித்தோம். அதுவே தற்போது ஏற்பட்டது.

இதன்போது ஜனாதிபதி தேர்தல் கொள்கை பிரகடனத்தில் தெரிவித்த விடயங்களையும் திரையில் காட்சிப் படுத்தினார். அத்துடன் காலி முகத்திட லுக்கு அநுரகுமார மற்றும் சஜித் பிரேமதாச சென்றபோது அவர்களை அங்கு தாக்க முற்பட்ட காட்சிகளையும் திரையிட்டு பழைய சம்பவங்களையும் ஜனாதிபதி நினைவுபடுத்தினார்.

மேலும் நாடு வங்குரோத்து அடைந்தபோது - காலி முகத்திடலில் இளைஞர்கள் போராட்டம் நடத்திய போது - நாட்டை பொறுப்பேற்க யாரும் முன்வரவில்லை. சஜித், அநுர அவர்கள் முன்வராதது தவறு இல்லை. ஏனெனில், காலிமுகத்திடலுக்கு அன்று செல்ல முடியாமல் போன இவர்களுக்கு எப்படி நாட்டை பொறுப்பேற்று நடத்த முடியும்.

அதனால் யாரும் முன்வராத நிலை யில் கோட்டாபய ராஜபக்ஷ் என்னைப் பொறுப்பேற்குமாறு தெரிவித்தார். அதன் பிரகாரமே நான் பொறுப்பேற் றேன். அதன் பின்னர் ஜூலை 9 காலி முகத்திடல் இணைஞர்கள் போராட் டத்தில் ஈடுபடத் தொடங்கினர் இதன் போது அவர் என்னை விரட்டவா அல்லது கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டவா வந்தார்கள் என தெரியாது. என்னையும் பிரதமர் பதவியை விட்டு செல்லுமாறு தெரிவித்தார்கள்.

என்றாலும் கோட்டாபய ராஜபக்ஷ் சென்ற பின்னர் - பதில் ஜனாதிபதியாக நான் தெரிவு செய்யப்பட்ட பின்னர் - ஐக்கிய மக்கள் சக்தி அனைவரும் என்னு டன் இணைவார்கள் என்றே நான் நினைத்தேன். அவ்வாறு அவர்கள் இணைந்தால் பொதுத் தேர்தலுக்கு சென்று நாங்கள் அனைவரும் அரசாங் கம் அமைத்து நாட்டை முன்னுக்கு கொண்டுசெல்லவே நினைத்தேன்.

ஆனால், அவர்கள் என்னுடன் இணைந்து செல்ல மறுத்தார்கள். ஏனெ னில், மகிந்த ராஜபக்ஷவுடன் நான் இருப்பதால் என்னுடன்இணைந்து செயல்பட முடியாது என்றார்கள். ஆனால், தற்போது மகிந்தவுடன் இருந்த ஜீ. எல். பீரிஸ், நாலக கொடஹேவா அவர்களுடன் இருக்கிறனர். ஐக்கிய மக்கள் சக்தியில் ஐக்கிய தேசிய கட் சிக்கு இடமில்லை. நாலக கொடஹே வாவின் ஆலோசனையின் பிரகாரமே அங்கும் எல்லாம் நடைபெறுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நாட்டுக்கு வந்திருக்கி றார்கள் அவர்களுடன் கலந்துரையாட எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுத்தேன். அரச நிதிக்குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா இதற்கு இணக்கம் தெரிவித்திருந் தார். ஆனால், இறுதி நேரத்தில் நாலக கொடஹேவாவின் ஆலோசனையை கேட்டு, இந்த சந்திப்புக்கு வரமுடியாது என எதிர்கட்சி எனக்கு கடிதம் அனுப்பி இருக்கிறது.

எனவே, இவ்வாறு குறுகிய அரசியல் நோக்கத்தில் இருந்து நாங்கள் விடுபட்டு நாட்டை முன்னேற்ற அனைவரும் முன் வர வேண்டும். அதனால் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்கள் பழைய விடயங்களை மறந்து, மீண்டும் எம்முடன் இணைந்துகொள்ள வேண் டும். சிலர் எம்முடன் ஏற்கனவே இணைந்துகொண்டுள்ளனர். அனைவ ரும் ஒன்றிணைந்து நாட்டின் பொருளா தாரத்தை கட்டியெழுப்புவோம் - என் றார். (ஐ)

# வாசனைத் திரவியங்கள் இறக்குமதிக்கு அனுமதி!

கொழும்பு, மார்ச் 11

மிளகு, இஞ்சி, கறிவேப்பிலை, சாதிக் காய், ஏலக்காய் உள்ளிட்ட பலசரக்கு பொருட்கள் மீள் ஏற்றுமதி நோக் கத் துக்காக இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

அமைச்சரவை மேற்கொண்ட தீர்மா னத்துக்கு அமை வாக குறித்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு உள்நாட்டில் குறைந்த பட்சம் 35 வீதம் பெறுமதி சேர் வரி சேர்க்கப்பட்டு மீள் ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான அறிவித் தல் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி யும் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, உலர் மஞ்சளை இறக்குமதி செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இறக்குமதியாகும் வாசனைத் திர வியங்களை இலங் கைக்கு இறக்குமதி செய்வதற்கு கடந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் முற்றாக தடை விதிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், முதலீட்டு ஊக்கு விப்பு அமைச்சர் டிசெம்பர் 6ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பித்த யோச னைக்கமைய, குறித்த வாசனைத் திரவி யங்களை மீள் ஏற்றுமதி செய்வதற்காக இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங் கப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ்ப்பாணம்...

கொண்டிருந்தபோது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகத்தையும் மிகுந்த மன வேதனைக்கு உள்ளாக்கியிருக் கின்றது. சைவர்களின் வழிபாட்டு உரிமை மிகப் புனிதமான விரத நாளில் அப்பட்டமாக மறுக்கப்பட்டு மிக மோசமாக சைவ சமய விழுமியங்களைப் புனித சடங்குகளை அவமதிக்கும் சம்பவங்கள் அரங்கேறியிருக்கின்றன.

அதன் உச்சக்கட்டமாகத் தவறேதும் செய்யாத சிவனடியார்கள் எண்வர் விரதமிருந்து பூசையில் ஈடுபட்ட தரு ணம், மோசமாகத் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டமையைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள னர்.

பூசை மற்றும் படையல் பொருட்கள் சப்பாத்துக் கால்களால் சீருடை தரித்த வர்களால் தட்டி அகற்றப்பட்டதுடன் பூசகர் மதிமுகராசா மீளவும் கைது செய்யப்படுள்ளார். அவருடன் மேலும் எழுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஈனச் செயல்கள் மிகப் பாரதூ ரமாக சைவத்தமிழர்களின் மனதைக் காயப்படுத்தியுள்ளதுடன் அடிப்படை வழிபாட்டுரிமையை மீறும் செயல் என்பதை உலகுக்கும் அரச உயர்பீடத் துக்கும் சொல்ல வேண்டியது ஒவ் வொரு தமிழர்களினதும் கடமையாகும்

உலகம் பூராகவும் உள்ள சைவர்க ளின் மிக உன்னதமான முதன்மையான விரதம் மகா சிவராத்திரி ஆகும். அந்த வகையில் இந்த மகா சிவராத்திரி தினத்தில் வவுனியா மாவட்டத்தில் உள்ள தொன்று தொட்டு தமிழ்ச் சைவர்கள் வழிபட்டு வரும் வெடுக்கு நாறிமலை ஆதி சிவன் கோயிலில் நடைபெற்ற மோசமான சம்பவங்களைக் கண்டித்தும் கைது செய்யப்பட்ட பக்தர் களை உடனடியாக விடுவிக்கக் கோரி யும் நாம் அணிதிரண்டு எதிர்ப்பைப் பதிவு செய்வோம்" - என்றுள்ளது.

முன்னதாக, மகா சிவராத்திரி தின மான கடந்த வெள்ளிக்கிழமை வெடுக்கு நாறிமலை ஆசிவன் ஆலயத்தில் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் தாக்குதல்களை நடத்தினர். அத்துடன், பூசை பொருட்களையும் காலால் உதைந்தும் மிதித்தும் நாசமாக் கினர். அத்துடன், ஆலய பூசகர் உட்பட 8 பேரை கைது செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.எம்.எவ்...

பிரதிநிதிகளுடனான கலந்துரையாட லில் கலந்துகொள்ளப் போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ அறிவித்துள்ளார். இந்தத் தகவலை ஜனாதிபதியின் செயலாளருக்கு கடிதம் மூலம் இதனைத் தெரிவித்தார்.

இதேபோன்று, அநுரகுமார தலை மையிலான தேசிய மக்கள் சக்தியும் இந்த கலந்துரையாடலில்பங்கேற்காது என்று அறிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இன்று முதல் அரசாங்கம் நெல் கொள்வனவு செய்யும்

கொழும்பு, மார்ச் 11

இன்று திங்கட்கிழமை முதல் அரசாங்கம் நெல் கொள்வனவை ஆரம்பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இதற்கமைய, அம்பாந்தோட்டையில் இருந்து நெல் கொள்வனவு நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

எனினும், அரசாங்கத்திடம் இருந்து இதுவரை உதவிகள் கிடைக்கப்பெறவில்லை எனவும் எதிர்வரும் வாரத்திலேனும் தமக்கான உதவிகள் கிடைக்கப்பெறுமென நம்புகிறேன்.

அந்த உதவிகள் கிடைக்கப்பெறாத பட்சத்திலும், அமைச்சின் நிதியினூடாக நெல் கொள்வனவு நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# பெண் படுகொலை சந்தேகநபர் கைது!


கொழும்பு, மார்ச் 11

பெண் ஒருவரை கொன்று தீமூட்டிய சம்பவம் தொடர்பான சந்தேக நபரை கொழும்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

2022 பெப்ரவரி 25ஆம் திகதி, கொழும்பு - எகொடஉயன பொலிஸ் பிரிவில் வீடொன்றில் நுழைந்து பெண்ணொருவரை படுகொலை செய்து தீ வைத்து எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொறட்டுவை - கட்டுகுருந்த பிரதேசத்தை சேர்ந்த 42 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எகொடஉயன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பேச்சாளர் பட்டியலில் நவீனின் பெயர் நீக்கம்



கொழும்பு, மார்ச் 11

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பிரசாரக் கூட்டம் நேற்று நடந்தது. இதில், பேச்சாளராக பங்கேற்கவிருந்த நவீன் திஸநாயக்கவின் பெயர் பேச்சாளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதாக அவர் சாடியுள்ளார்.

தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பிரசாரக் கூட்டம் குருநாகல் - குளியாப்பிட்டி நகரசபை மைதானத்தில் நேற்று நடந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் "நிதர்சனம்" எனும் தொனிப்பொருளில் இந்த பிரசார கூட்டம் நடைபெற்றது.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் பங்கேற்கும் முதலாவது தேர்தல் பிரசார கூட்டம் இதுவாகும்.

இந்தக் கூட்டத்தில் ருவான் விஜயவர்தன, வஜிர அபேவர்த்தன, சாகல ரத்நாயக்க, அகிலவிராஜ் காரியவசம், மனுஷ நாணயக்கார, பாலித ரங்கே பண்டார மற்றும் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட சிலருக்கு உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இந்தக் கூட்டத்தில் உரையாற்றுவோர் பட்டியலில் இருந்து தமது பெயர் நீக்கப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நவீன் திஸநாயக்க தமது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் இந்த தீர்மானத்தை எடுத்தது யார் என ஆச்சரியமாக இருக்கிறது", என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தாம் கட்சிக்கு ஆதரவாக இருப்பேன் எனவும் ஆனால், தனிநபர் கண்ணியம் பாதிக்கப்படக்கூடாது என்றும் கூறினார்.

இதனிடையே, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கலந்துகொள்வார் என அறிவிக்கப்பட்ட போதும் அவர் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதி தேர்தலில் ரணில் போட்டியிட்டால் ஆதரவு!

## ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

நுவரெலியா, மார்ச் 11

**எமது தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு - அதேபோல அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவாராக இருந்தால் அவருக்கு ஆதரவு வழங்க முடியும் என்று நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மகளிர் தின நிகழ்வு நுவரெலியாவில் நேற்று நடந்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மூன்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. முதல் விடயம் மலையகத்தில் வீட்டுத் திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். அந்தவகையில் 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய சூழ்நிலையை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

இரண்டாவது மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வொன்று அவசியம். தற்போது சம்பள நிர்ணய சபை ஊடாக சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்கு தொழில் அமைச்சர் நடவடிக்கை எடுத்துவருகின்றார். இது தற்காலிக தீர்வு மாத்திரமே. எனவே, நிரந்தரத் தீர்வு என்ன வென்பதை ஜனாதிபதி முன்வைக்க வேண்டும்.

இறுதியாக காணி உரிமை விடயமாகும். இதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு ஜனாதிபதி 400 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். காணி உரித்தும் வழங்கப்பட வேண்டும். இவற்றை செய்து, ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் அவரை நாம் ஆதரிப்போம்.

கோரிக்கைகளை விடுத்துக் கொண்டும், ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டுக் கொண்டும், அறிக்கைகளை விடுத்துக்கொண்டும் அரசியல் நடத்துவதில்லை நாம். சொல்லுக்கு செயல் வடிவம் கொடுத்து வருகின்றோம்.

அதேவேளை, இலங்கையில் மகளிருக்கான ஒதுக்கீடு தொடர்பில் சட்டம் இயற்றுவதற்கு முன்பிருந்தே பெண்களுக்கு இ. தொ. கா முக்கியத்துவம் வழங்கிவருகின்றது. பெண்களுக்கு உயர்பதவிகள்கூட வழங்கப்பட்டுள்ளது. எனவே, பெண்களை மதித்து, அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி, அவர்களால் முன்வைக்கப்படும் ஆலோசனைகளும் ஏற்கப்பட்டே முடிவுகள் எடுக்கப்படும்.

எமது பெருந்தோட்டத் தொழில் துறையில் ஈடுபடும் தாய்மாரின், சகோதரிகளின் தொழில்சார் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம் - முன்னெடுத்தும் வருகின்றோம்." - என்றார்.

# மனைவியின் நிர்வாண ஒளிப்படத்தை உறவினர்களுக்கு அனுப்பிய கணவர்!

கொழும்பு, மார்ச் 11

மனைவியின் நிர்வாண ஒளிப்படத்தை உறவினர்களுக்கு அனுப்பிய கணவர் தொடர்பில் மின்னேரியா பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் அநுராதபுரம் - மின்னேரியா பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.


பாதிக்கப்பட்ட பெண் இது தொடர்பில் மின்னேரியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நீராடிக்கொண்டிருந்த போது கணவர் தன்னை ஒளிப்படம் எடுத்தார் என்றும் பின்னர், அவர் அதனை உறவினர்களுக்கு அனுப்பி யுள்ளார் எனவும் பாதிக்கப்பட்ட பெண் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மின்னேரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஜனாதிபதித் தேர்தலில் சஜித் - அநுர ஆகியோர் இடையேயே போட்டி!

## பழனி திகாம்பரம் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 11

ஜனாதிபதி தேர்தலில் முதலில் நடத்தப்பட வேண்டும் எனவும் அந்த தேர்தலில் பல வேட்பாளர்கள் போட்டியிடலாம் எனவும் சஜித் பிரேமதாஸவுக்கும் அநுர குமார திஸநாயக்கவுக்கும் இடையிலேயே போட்டி நிலவுவதாகவும் ரணில் விக்ரமசிங்கவுக்கு அல்ல என்று பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலுக்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஏனைய கட்சிகள் இன்னும் தேர்தல் பிரசாரங்களை ஆரம்பிக்கவில்லை என்ற போதிலும் அநுரகுமார திஸநாயக்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவும் இன்னும் ஆரம்பிக்கவில்லை.

ஜனாதிபதி தேர்தலோ,பொதுத் தேர்தலோ நாங்கள் எதிர்கொள்ள தயாராக இருக்கின்றோம். எனினும் அரசாங்கம் கட்டாயம் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும். நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் இரண்டில் மூன்று பெரும்பான்மை பலம் இருக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் அரசாங்கம் எந்த வகையிலும் இரண்டில் மூன்று பெரும்பான்மையை பெற முடியாது. மக்கள் தேர்தல் ஒன்றை எதிர்பார்த்துள்ளனர். அரசாங்கத்தில் இருக்கும் திருடர்களை சிறையில் அடைக்க மக்கள் தயாராக இருக்கின்றனர். ஏற்கனவே அமைச்சர்களும் செயலாளர்களும் சிறையில் இருக்கின்றனர்.

மக்கள் பெரும் கோபத்தில் உள்ளனர். 40 வீதமான வாக்காளர்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதை இன்னும் தீர்மானிக்கவில்லை.

ஜனாதிபதி தேர்தலில், சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸநாயக்க மற்றும் ரணில் விக்ரமசிங்க இடையிலேயே போட்டி உள்ளது. நாட்டில் காணப்படும் நிலைமையுடன் அரசாங்கம் தேர்தலில் வெற்றிபெறுவது சிரமம்.

இதனால், சஜித் மற்றும் அநுர இடையிலேயே போட்டி நிலவுகிறது. யார் வெற்றி பெற்றாலும் பிரச்னையில்லை. காரணம் நாங்கள் சிறிய கட்சி. சஜித் வென்றாலும் அநுர வென்றாலும் எம்மால் இணைந்து வேலை செய்ய முடியும்.

இம்முறை, மத பேதங்களை தூண்டி இம்முறை வாக்குகளை பெற முடியாது. சிங்கள மக்களின் வாக்குகள் மூன்றாக பிரியும். அநுரகுமாரவுக்கு இம்முறை வாக்குகள் அதிகரித்துள்ளன.

சிறுபான்மை கட்சிகள் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கின்றன. எனினும், சிறுபான்மை கட்சிகள் வெற்றி பெறும் அரசாங்கத்துடன் இணைந்தே பணியாற்றும். அது தான் அரசியல். எனினும் நான் தொடர்ந்தும் சஜித்துடன் இருப்பேன் - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மாலத்தீவை விட்டு வெளியேறும் இந்தியப் படை, காலூன்றும் சீனா!

அன்பரசன் எத்திராஜன்

மாலத்தீவு-சீனா உறவுகள் நெருக்கமாகி வரும் நிலையில், மாலத்தீவில் உள்ள இந்திய ராணுவ வீரர்களின் ஒரு பகுதியினர் அந்நாட்டை விட்டு நேற்று மார்ச் 10-ஆம் திகதி வெளியேறி உள்ளனர். படிப்படியாக நிகழும் இந்த வெளியேற்றம் மே 10-ஆம் தேதிக்குள் முழுமையடைய வேண்டும் என்று இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

சீனாவுக்கு ஆதரவாகச் செயல்படுவதாக கருதப்படும் மாலத்தீவு அதிபர் முய்சு விதித்துள்ள மே மாதக் காலக்கெடுவை பூர்த்தி செய்யும் வகையில், இந்திய ராணுவ வீரர்கள் படிப்படியாக திரும்பப் பெறப்படுவர்.

மாலத்தீவில், இந்தியாவைச் சேர்ந்த இரண்டு மீட்பு மற்றும் உளவு ஹெலிகாப்டர்கள் மற்றும் ஒரு சிறிய விமானத்தை பராமரிக்கவும், இயக்கவும் தனது ராணுவ வீரர்கள் மாலத்தீவில் உள்ளதாக இந்தியா கூறியுள்ளது. இந்த விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களை இந்தியா பல ஆண்டுகளுக்கு முன் மாலத்தீவிற்கு நன்கொடையாக கொடுத்திருந்தது.

இந்தியப் படைகளை மாலத்தீவில் இருந்து அகற்றும் நடவடிக்கை என்பது அதிபர் முய்சுவின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாகும்.

மாலத்தீவின் மீது இந்தியா நீண்டகாலமாக தனது செல்வாக்கை செலுத்தி வருகிறது.

மாலத்தீவில் இருந்து இந்தியப் பெருங்கடலின் முக்கியமான பகுதிகளை கண்காணிக்க அந்நாடு இந்தியப் படையினரை அனுமதித்தது. ஆனால், முய்சு பதிவியேற்விற்கு பின், கடந்த சில மாதங்களாக இரு நாடுகளிடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

ஆசியாவில் உள்ள வல்லரசுகள், இந்தப் பிராந்தியத்தில் செல்வாக்கு செலுத்த துடித்துக்கொண்டிருக்கும் வேளையில், இந்த சந்தர்பத்தை, சீனா, சுரண்டுவதற்கான ஒரு இடைவெளியாகப் பார்க்கிறது.

இருந்தபோதிலும், ராணுவத்தினரைத் தவிர்த்து, இந்தியாவில் உள்ள சிவில் தொழில்நுட்ப ஊழியர்கள் இந்தியா சார்பில் வழங்கப்பட்ட விமானத்தை இயக்க மாலத்தீவு ஒப்புக்கொண்டுள்ளது. இதற்காக, ஏற்கனவே இந்தியாவில் இருந்து ஒரு குழுவினர் மாலத்தீவு சென்றுள்ளனர்.

"விமானம் மாலத்தீவில் இருக்கும், அவற்றைப் பராமரிக்க இந்திய பணியாளர்கள் இருப்பார்கள். எனவே இரு தரப்பும் சமரசம் செய்து கொண்டதாகத் தெரிகிறது," என்கிறார் முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர் ஷியாம் சரண்.


மாலத்தீவில் உள்ள சிலர், ராணுவ வீரர்களுக்கு பதிலாக சிவிலியன்களை நியமிப்பதை முய்சுவின் "இந்தியா வெளியேறு" பிரச்சாரத்திற்குப் பிறகு கிடைத்த ஒரு முக்கியமான முன்னேற்றமாகப் பார்க்கிறார்கள்.

இதுகுறித்து கேட்க முய்சுவை தொடர்புகொள்ள முயன்றபோது, முய்சுவின் அலுவலகம் பதிலளிக்கவில்லை.

### மாலத்தீவுக்கு சீனா என்ன உதவி செய்கிறது?

ஐந்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட மாலத்தீவு, ஆசிய சக்திகளின் போட்டிக்குள் சிக்கிக் கொள்ளும் அபாயத்தில் உள்ளதாக சில ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

சீனா பல ஆண்டுகளாக மாலத்தீவிற்கு நூறு கோடி டாலர்களுக்கு மேல் கடன் கொடுத்துள்ளது, பெரும்பாலும் உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காகவே இந்தக் கடன் கொடுக்கப்பட்டுள்ளது.





பெய்ஜிங் மற்றும் மாலே ஆகிய இரு நாடுகளும் தங்கள் உறவுகளை ஒரு விரிவான மூலோபாய கூட்டாண்மைக்கு உயர்த்திக் கொண்டன. முந்தைய மாலத்தீவு தலைவர்களைப்போல அல்லாமல், முய்சு இந்தியாவுக்கு வருவதற்கு முன்னதாகவே, சீனாவிற்கு அரசு முறைப்பயணமாகச் சென்றார்.

அதனைத் தொடர்ந்து, இந்த வாரத் தொடக்கத்தில், மாலத்தீவு அரசு, சீனாவுடன் ஒரு ராணுவ உதவி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த முன்னேற்றம், இந்தியாவை சற்று கவலையடையச் செய்தது.

கூடுதல் விவரங்களை தர மறுத்த மாலத்தீவு பாதுகாப்பு அமைச்சகம், இந்த ஒப்பந்தம் எந்தவிதப் பணப்பரிமாற்றமும் இல்லாமல் நடந்ததாக் கூறியது. ஆனால், செவ்வாய்கிழமை அன்று ஒரு பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அதிபர் முய்சு, சீனா மாலத்தீவு பாதுகாப்பு படைகளுக்கு உயிரைக்கொல்லாத ஆயுதங்களைக் கொடுத்து, அவர்களுக்கு பயிற்சியும் அளிக்கும் எனக் கூறினார்.

"இது முன்னோடியில்லாதது. ராணுவ உதவியை வழங்குவதற்காக மாலத்தீவு பெய்ஜிங்குடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது இதுவே முதல் முறை," என்று மாலத்தீவு அரசியல் ஆய்வாளர் அசிம் ஜாஹிர் தெரிவித்தார்.

"முதலீடு மற்றும் மூலதனத்தின் அடிப்படையில் முய்சு சீனாவுடன் நெருக்கமான உறவுகளை உருவாக்குவார் என்று எங்களுக்குத் தெரியும், ஆனால் அவர் இந்த அளவிற்கு செல்வார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை," என்றும் அவர் கூறினார்.

ஆனால் பெய்ஜிங் மாலத்தீவில் நீண்டகால ராணுவத் திட்டங்கள் எதுவும் இல்லை என்று மறுக்கிறது.

"இது இரு நாடுகளுக்கிடையேயான இயல்பான உறவு. இந்தியப் பெருங்கடலில் சீனா ராணுவப் இருப்பைக் கொண்டிருக்க விரும்பினால், அதற்காக மாலத்தீவுகளை விட அது சிறந்த தேர்வுகளைச் செய்திருக்கலாம்," என்கிறார் செங்டு இன்ஸ்டிடியூட் ஆப் வேர்ல்ட் அஃபர்ஸ் சிந்தனைக் குழுவின் தலைவர் லாங் சிங் சுன்.

### சீனாவுடன் நெருங்கும் மாலத்தீவு

சீனா உறுதியளித்திருந்த போதிலும், பலரும் சீனா இந்த சந்தர்பத்தைத் தனக்குத் சாதகமாகப் பயன்படுத்துவதாக நம்புகின்றனர். ஏனெனில், இதற்கு முன்பு இருந்த அதிபர் இப்ராகிம் மொகமத் சோலிஹ் இந்தியாவுக்கு மிக நெருக்கமாக இருந்தார்.

தேர்தல் பிரச்சாரத்தின் போது, முய்சு, முந்தைய நிர்வாகம் டெல்லியுடனான மாலேயின் ஒப்பந்தங்களின் உண்மையை வெளியிடவில்லை என குற்றம் சாட்டியிருந்தார். தற்போது அதேபோன்ற விமர்சனம் அவர் மீதும் வைக்கப்படுகிறது.




'பெய்ஜிங்கிற்கு அவர் மேற்கொண்ட பயணத்தின் போது அவர் கையெழுத்திட்ட பெரும்பாலான ஒப்பந்தங்களின் விவரங்கள் எங்களிடம் இல்லை. முய்சு அத்தகைய ஒப்பந்தங்களின் விவரங்களை வெளியிடாத போது முந்தைய அரசாங்கத்தை விட சிறந்தவர் அல்ல," என ஜாஹிர் கூறினார்.

கடந்த மாதம், டெல்லியின் எதிர்ப்பையும் மீறி, சீன ஆராய்ச்சிக் கப்பலான சியாங் யாங் ஹாங் 3, மாலேயில் நிறுத்த முய்சுவின் நிர்வாகம் அனுமதித்தது.

ஆனால், சீன ராணுவம் நீர்மூழ்கிக் கப்பல் நடவடிக்கைகளில் பயன்படுத்தக் கூடிய தரவுகளை சேகரிக்கும் பணியாக இது இருக்கலாம் என்று அஞ்சும் சில இந்திய நிபுணர்களை இது நம்ப வைக்கவில்லை.

உறவுகளில் தொடர்ந்து வரும் விரிசல்களுக்கு மத்தியில், டெல்லி மாலத்தீவுக்கு அருகாமையில் உள்ள இந்திய தீவுக்கூட்டமான லட்சத்தீவில் புதிய கடற்படை தளத்தை அமைத்துள்ளது.

மினிகாய் தீவில் உள்ள ஐ.என்.எஸ் ஜடாயு 'மேற்கு அரபிக்கடலில் கடற்கொள்ளையர் எதிர்ப்பு மற்றும் போதைப் பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகளில்' தனது முயற்சிகளை மேம்படுத்தும் என்று இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

சிலர் இதை மாலத்தீவுக்கு இந்தியா அனுப்பும் செய்தியாகப் பலர் பார்த்தாலும், இது தற்போதைய பதட்டங்களுக்கான பதில் இல்லை என்று இந்திய நிபுணர்கள் கூறுகின்றனர்.

"இது புதிய விஷயமாக நான் நினைக்கவில்லை. எனக்குத் தெரிந்தவரை, இது சில காலமாக செயல்பாட்டில் உள்ளது," என்று முன்னாள் இந்திய தூதர் சரண் கூறினார்.

முய்சுவின் இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் அவரது நாட்டில் பலரையும் கவலையில் ஆழ்த்தியுள்ளன. அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் கட்டுமானப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மாலத்தீவு இந்தியாவையே சார்ந்துள்ளது. கோவிட் தொற்றுநோய்க்குப் பிறகு, மாலத்தீவுக்கு அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை இந்தியா அனுப்பியது.

ஆனால், பிரதமர் நரேந்திர மோதியைப் பற்றி சில அதிகாரிகள் சர்ச்சைக்குரிய கருத்துக்களைத் தெரிவித்ததை அடுத்து, மாலத்தீவை "புறக்கணிக்க" இந்தியர்களுக்கு சமூக ஊடக அழைப்புக்கு வழிவகுத்த சமீபத்திய சர்ச்சைக்குப் பிறகு இது மாறிவிட்டது.

முய்சு பெய்ஜிங்கில் இருந்தபோது சர்ச்சை வெடித்தது. தொற்றுநோய்க்கு முன்னர் இருந்ததுபோல மீண்டும் முதலிடத்தைப் பெற அதிக சுற்றுலாப் பயணிகளை அனுப்பத் தொடங்குமாறு சீன அதிகாரிகளை மாலத்தீவு அரசு கேட்டுக் கொண்டது.

அப்போதிருந்து, சீன சுற்றுலாப் பயணிகள் கணிசமான எண்ணிக்கையில் செல்லத் தொடங்கினர். சுற்றுலா அமைச்சகத்தின் தரவுகளின்படி, ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் மாலத்தீவுக்குச் சென்ற சுமார் 4 லட்சம் சுற்றுலாப் பயணிகளில் 13 வீதம் பேர் சீனாவைச் சேர்ந்தவர்கள். இந்தியா ஐந்தாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21-ஆம் தேதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அவர் அவையில் பெரும்பான்மை பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளதால், முய்சுவின் நடவடிக்கை தீவிரமடையும் என்று சிலர் எதிர்பார்க்கின்றனர்.

# ஸ்டெர்லைட் ஆலை : வரவேற்கத்தக்க தீர்ப்பு

தமிழ்நாடு அரசால் மூடப்பட்ட தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையை மீண்டும் தொடங்குவதற்கான கோரிக்கையை உச்ச நீதிமன்றம் நிராகரித்திருப்பது வரவேற்கத்தக்கது. இந்த உத்தரவு சுற்றுச்சூழல் விதிகளை மீறும் நிறுவனங்களுக்கு ஒரு பாடம். தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையிலிருந்து வெளியாகும் கழிவுகளிலிருந்து மக்களுக்கு நோய் பாதிப்பு ஏற்படுவதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

எனவே, ஆலையை மூட வலியுறுத்தி 2018இல் பொதுமக்கள் போராட்டம் நடத்தினர். போராட்டத்தின் நூறாவது நாளான மே 22 அன்று காவல் துறை நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் கொல்லப்பட்டனர். இதையடுத்து மே 28 அன்று ஸ்டெர்லைட் ஆலையை மூடி, சீல் வைத்தது தமிழ்நாடு அரசு.

இந்த நடவடிக்கையை எதிர்த்து ஸ்டெர்லைட் ஆலையை நடத்திவரும் வேதாந்தா நிறுவனம், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க அனுமதி மறுத்த தமிழ்நாடு அரசின் அரசாணை செல்லும் என 2020இல் தீர்ப்பளித்தது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து வேதாந்தா நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.

இந்த வழக்கில்தான் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா அமர்வு, வேதாந்தா நிறுவனத்தின் மேல்முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்து, தமிழ்நாடு அரசின் நடவடிக்கை செல்லும் எனத் தீர்ப்பளித்திருக்கிறது.

இதன் மூலம் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடும் சூழல் ஏற்பட்டுள்ளது. இது ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகப் போராடிய மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். ஆலையால் விளைந்த சுற்றுச்சூழல் மாசினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் போராட்டத்தில் உயிரிழந்தவர்களுக்கும் கிடைத்த நீதியும்கூட.

ஸ்டெர்லைட் ஆலை மேற்கொண்ட விதிமீறல்களின் அடிப்படையில் இந்த முடிவை உச்ச நீதிமன்றம் எடுத்துள்ளதாக நீதிபதிகள் தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளனர். மேலும், ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம் கழிவுகளைக் கையாண்ட விதம் குறித்த அதிருப்தியையும் நீதிபதிகள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த ஆலை மூடப்பட்டுள்ளதால் இந்தியாவின் தாமிரத் தேவைக்கு அந்நிய நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. ஆனால் அதைவிட ஆலையைச் சுற்றியுள்ள மக்களின் சுகாதாரமே மிகவும் முக்கியமானது என்பதை அழுத்தம் திருத்தமாகத் தீர்ப்பில் கூறியுள்ள நீதிபதிகள், ஒரு மாநிலத்தின் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மாநில அரசின் கடமைகளில் ஒன்று என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

ஸ்டெர்லைட் ஆலையால் சுற்றுச்சூழல் எப்படியெல்லாம் பாதிப்பு அடைந்திருக்கிறது என்பதை ஆதாரபூர்வமாக நீதிமன்றத்தில் நிரூபித்த தமிழ்நாடு அரசும், அரசு சார்பில் வாதங்களை முன்வைத்த வழக்கறிஞர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

அதே நேரத்தில், ஸ்டெர்லைட் ஆலைக் கழிவுகள் விஷயத்தில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தனது கடமையை முழுமையாகச் செயல்படுத்துவதில் அக்கறை காட்டவில்லை என்று உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருப்பது, கவனிக்கத்தக்கது. இனிமேலாவது சுற்றுச் சூழல் பாதிப்புகளைத் தடுப்பதற்கான பணிகளில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

சுற்றுச்சூழல் விதிமீறல்களில் ஈடுபடும் நிறுவனங்கள் மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படுவதை உணர்ந்து, தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும். மேலும், ஆலைக் கழிவுகளைக் கையாள்வதில் விதிமீறல்களில் ஈடுபடும் நிறுவனங்கள் மீது தயவு தாட்சண்யம் இன்றி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.







## தமிழ்நாட்டில் வட மாநில குழந்தை கடத்தல் கும்பல் உலவுவது உண்மையா?

கடந்த இரண்டு மாதங்களாக, வட மாநிலத்தைச் சேர்ந்த ஒரு கும்பல் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் குழந்தைகளைக் கடத்திச் செல்வதாக சமூகவலைதளத்தில் போலியான தகவல் பரப்பப்படுகிறது.

இதனால், சில வட மாநிலத்தவர்கள் தாக்கப்படும் சம்பவங்களும் நடந்திருக்கின்றன. இந்நிலையில், இந்தப் போலிச் செய்தியை பரப்பிய இருவரை திண்டுக்கலில் போலீசார் கைது செய்துள்ளனர்.

தமிழ்நாடு அரசின் உண்மை சரிபார்க்கும் குழு இந்த காணொளிகளைச் சரிப்பார்த்து அவை போலியானவை என்று உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக, தமிழ்நாட்டில் வடமாநிலத்தைச் சேர்ந்த ஒரு கும்பல் குழந்தைகளைக் கடத்திச் செல்வதாக ஒரு காணொளி சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகிறது. இதைப் பரப்புபவர்கள் 'குழந்தைகளை பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள்' என்ற தகவலையும் பகிர்ந்து வருகின்றனர். இதன்காரணமாக, சென்னை, திண்டுக்கல், உட்பட பல இடங்களில் வடமாநில இளைஞர்களை 'குழந்தை கடத்தல்காரர்கள்' என சந்தேகித்து அவர்களைப் பிடித்து பொதுமக்கள் அடிக்கும் சம்பவங்களும் நடைபெற்றுவருகின்றன.

குறிப்பாக, கடந்த மாதம், சென்னை அருகே பம்மலில் குழந்தைக் கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறி ஒரு திருநங்கையை வடமாநிலத்தவர் என்று தவறாகச் சந்தேகித்து மக்கள் தாக்கினர். இது தொடர்பாக காவல்துறையினர் இருவரை கைது செய்தனர். மற்றொரு சம்பவத்தில், திருவொற்றியூர் பகுதியில் தூய்மைப் பணி மேற்கொண்டு வந்த பிகாரைச் சேர்ந்த வட மாநில இளைஞரை அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் கடந்த பிப்ரவரி 27-ஆம் தேதி தாக்கினர். அதேபோல் சென்னையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சம்பவங்கள் நடைபெற்று வந்தன.

இதன்பிறகு, காவல்துறையினர் அந்தக் காணொளி உண்மையானதல்ல யாரும் நம்ப வேண்டாம் என பொது மக்களிடம் செய்தியறிக்கை மூலமாகவும், ஊடகங்கள் மூலமாகவும் கேட்டுக்கொண்டனர்.

ஆனால், இந்தக் காணொளி தற்போது சென்னையைத் தாண்டி நாகப்பட்டினம், காஞ்சிபுரம், மதுரை, திண்டுக்கல், விழுப்புரம், என தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் பரவத் துவங்கி இருக்கிறது.

இது குறித்து பேசிய காவல்துறை கண்காணிப்பாளர் அ.பிரதீப், வேடசந்தூரில் தனியார் தொலைகாட்சி சேனலின் லோகோவைப் போலியாகத் தயார் செய்து, இந்த போலிச் செய்தியைப் பரப்பிய பாம்புலுப்பட்டியைச் சேர்ந்த புகைப்படக் கலைஞர் தங்கராஜ் (23), ஒட்டன் சத்திரம் பகுதியில் குழந்தைகள் கடத்தப்படுவதாக பொய் செய்திபரப்பி விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையைச் சேர்ந்த வடிவேல் முருகன் (30) ஆகிய இருவரும் இந்திய தண்டனைச் சட்டம் 504, 507, சமூக வலைதளத்தில் பயன்படுத்தி பொய் செய்தி பரப்பியதால் ஐடி பிரிவின் 65, 67 பிரிவுகளில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

மேலும், "குழந்தைகள் கடத்தப்படுவதாகப் பரவும் தகவலை மக்கள் நம்ப வேண்டாம், இது போன்ற செய்திகளை யாருக்கும் பகிர வேண்டாம்," என்றார் பிரதீப்.



இது குறித்து பேசிய பனியன் மற்றும் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் திருப்பூர் மாவட்டப் பொதுச்செயலாளர் ஜி. சம்பத், தமிழ்நாட்டில் வட மாநில இளைஞர்கள் குழந்தைகளை கடத்துவதாக பரப்பப்பட்டு வரும் வதந்தி, இனவாதக் கருத்துக்களை பேசுபவர்களால் திட்டமிட்டு பரப்பப்படுகிறது, என்றார்.

"இதுபோன்ற வதந்திகளால் திருப்பூர்,கோவை மாவட்டங்களில் பதற்றம் ஏற்படும். இப்படித்தான் கடந்த ஆண்டு, திருப்பூரில் வட மாநில தொழிலாளர்கள் தாக்கப்பட்டதாக பிகாரிலிருந்து பொய் செய்தி பரப்பப்பட்டு வட மாநிலத்தவர்கள் தமிழ்நாட்டிலிருந்து வெளியேறினர். எனவே, அரசு இதுபோன்ற வதந்திகளைத் தடுக்க தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு, இவை தொடர்ந்து பரப்பப்படுவதை தடுக்க வேண்டும்," என்றார். ●

